✠

A. M. D. G.

# திருச்சபையும் அதன் தண்டவணைகளும்.

PRINTED AT
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRE[SS]
TRICHINOPOLY.

1924.

14-8

Q6 (2)
N24
149405.

✠

A. M. D. G.

---

# திருச்சபையும்

# அதன் தண்டனைகளும்.

PRINTED AT

ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS,

TRICHINOPOLY.

—

1924.

149405

CUM PERMISSU SUPERIORUM.

Imprimatur: ✠ AUGUSTINUS, S. J.,

*Ep. Trichinopolit.*

# திருச்சபையும் அதன் தண்டனைகளும்.

## விஷய சூசிகை.

முன்னுரை.

### முதற்பாகம்.—திருச்சபைத் தண்டனைகள்.
### (De Pænis.)


முதலாம் அதி : திருச்சபைத் தண்டனையும் திருச்சபைக்கு இவ்விஷயத்தில் உள்ள அதிகாரமும் ... ... 3

2-ம் அதி : ஞான சிட்சைகள்—(De Censuris) ... 8

3-ம் அதி : திருச்சபைப் பிரஷ்டம்—(De Excommunicatione) ... ... ... 13

4-ம் அதி : தீர்க்கப்பட்ட திருச்சபைப் பிரஷ்டம்—(Excom. Latae Sententiae) ... ... 17

5-ம் அதி : தீர்க்கும் திருச்சபைச் சிட்சை—(Ferendae sententiae) ... ... ... 24

6-ம் அதி : நிஷேதம்.—(2268-2277 தி. ச.) (De Interdicto) ... ... ... ... 28

7-ம் அதி : ஞான சிட்சைகளுக்கு மன்னிப்பு—(De absolutione a censuris) ... ... 29

8-ம் அதி : அபராத தண்டனைகள்—(De pænis vindicativis) ... ... ... 33

## இரண்டாம் பாகம்.—கத்தோலிக்க சத்திய திருச்சபை.

## (De Ecclesia)


1. மெய்யான மதமும் திருச்சபையும் ... ... 37
2. திருச்சபை வெளியரங்கமுமானதே ... ... 38
3. ஒரே திருச்சபைதான் உண்டு ... ... ... 39
4. கத்தோலிக் திருச்சபை தெய்வீகமானது ... ... 40
5. திருச்சபையும் இரட்சண்ணியமும் ... ... 41
6. பரிசுத்த பாப்பானவரின்றி திருச்சபையில்லை ... 42
7. திருச்சபையின் அமைப்பு... ... ... ... 44
8. சந்நியாச சபைகள் ... ... ... ... 45
9. திருச்சபையின் இரு அங்கத்தினர் ... ... 46
10. (a) அர்ச். பாப்பானவரினதிகாரம் ... ... ... 47
10. (b) மேற்றிராணியார் ... ... ... ... 49
11. கற்பிக்கும் அங்கத்தினரின் அதிகார வரம்பு ... 52
12. திருச்சபையும் இலௌகீக அதிகாரங்களும் ... 54
13. திருச்சபை தேடும் சிலாக்கியம் ... ... ... 55
14. மேற்றிராணிமார்கள் இலௌகீக அதிகாரிகளன்று ... 56
15. மேற்றிராணிமார்களின் நியமகம் ... ... ... 57
16. பிரிவினை ... ... ... ... ... ... 58
17. திருச்சபைக்கு விரோதமான பொய்க்கோட்டைகள் 59
18. திருச்சபை சிறுவரின் தாய் ... ... ... 60
19. திருச்சபைக் காதகர் ... ... ... ... 61
20. திருச்சபையின் காலவரை ... ... ... 63


### அநுபந்தம்.


மேற்றிராணிமார்களின் அதிகாரத்தைப்பற்றி 13-ம் சிங்கராயர் என்னும் பரிசுத்த பாப்பானவர் எழுதிய நிருபம் ... ... ... ... ... 65

முதற்பாகத்தின் விஷய பத்திரம் ... ... ... 71

முதற்பாகத்திற் குறித்துள்ள திருச்சபைச் சட்ட இலக்கக் கிரமமும் அவைகள் தோன்றும் பக்கமும்... 72

# முன்னுரை.

திருச்சபைக்கு எப்பேர்க்கொத்த அதிகாரங்கள் உண்டென்று தெரியாமல் சிலர் பேசுகிறபடியாலும்; இக்காரணத்தால் திருச்சபைத் தண்டனைகள் விதிக்கப்படும்போது இதை இவ்வித்தகையோர் விதிக்க அதிகாரமுண்டோ இல்லையோவென்று சந்தேகிப்பதினாலும்; தண்டனைகள் விதிக்கும்போது இவ்வித்தண்டனைகள் திருச்சபையில் இருக்கின்றனவென்று முன்னமே ஏன் சொல்லிக்கொடுக்கவில்லையென்று சிலர் முறையிடுவதினாலும், இச்சிறு புத்தகத்தை எழுத நேர்ந்தது.

திருச்சபைச் சட்டங்களை அவ்வவ்வாறே வார்த்தைக்கு வார்த்தை எல்லாவிடங்களிலும் நேர் மொழிபெயர்ப்பு செய்யவில்லை; சிலவிடங்களில் அவ்வச்சட்டத்தின் பொருளையும் சாராம்சத்தையும் குறித்திருக்கிறேன். மூலபாஷையோடு ஒத்துப்பார்க்க விரும்பும் கற்றறிந்தோர்களுக்குதவியாக அங்கங்கே திருச்சபைச்சட்டத்தின் இலக்கத்தைக் குறித்துளேன்.

திருச்சபைத் தண்டனையை மாத்திரம் கிறீஸ்துவர்கள் அறியாமல், திருச்சபையைப்பற்றியும் கொஞ்சம் அறியும் வண்ணம், இப்புத்தகத்தின் இரண்டாம் பாகமாக, மகா வண. தி. செகூர் என்னும் ஆண்டவர் திருச்சபையைப் பற்றி எழுதிய துண்டுப் பிரசுரத்தின் சாராம்சத்தையும் கொடுத்திருக்கிறேன்.

தேவதாயே! உமது திருநாளாகிய இன்று இச்சிறு புத்தகத்தை உமக்கு பாதகாணிக்கையாக வைத்து உம்மிடம் கேட்பதுயாதெனில் தமிழ் நாட்டிலுள்ள உம்மக்கள், திருச்சபையின் அழகையும் சௌந்திரியத்தையும் நாளுக்கு நாள் அதிகமாய்க் கண்டுணர்ந்து அதை அதிகமாய் நேசிப்பார்களாக.

*Feast of the Visitation of Our Lady,*
*2nd July 1924.*

J. M. G., S. J.

## முதற்பாகம்.

# திருச்சபைத் தண்டனைகள்.
# (DE PÆNIS)

### முதலாம் அதிகாரம்.

## திருச்சபைத் தண்டனையும் திருச்சபைக்கு இவ்விஷயத்தில் உள்ள அதிகாரமும்.

தனக்குக் கீழ்ப்பட்டவர்களில் யாராவது ஒருவர் குற்றஞ் செய்தால் அவரை ஞான தண்டனைகளாலும், இலௌகீக தண்டனைகளாலும் அடக்குவதற்கு, சுதந்தரமும் உரிமையும் திருச்சபைக்கு உண்டென்றும்; இச்சுதந்திரம் இலௌகீக அதிகாரங்களுக்குக் கீழ்ப்பட்டதல்லவென்றும் அது இவ்விஷயத்தில் சுயாதீனமுடையதென்றும் 2214-ம் திருச்சபைச் சட்டம் சொல்லுகிறது.

இவ்வதிகாரத்தை ஆண்டவரே திருச்சபை அதிகாரிகளுக்கு அளித்திருக்கிறார். "பூலோகத்தில் நீ எதைக் கட்டுவாயோ, அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். நீ பூலோகத்தில் எதைக்கட்டவிழ்ப்பாயோ, அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்." (மத். 16, 19.) என்று அர்ச். இராயப்பருக்கு சேசுநாதர் சுவாமி சொல்லவில்லையா? இவ்வதிகாரத்தை வேறோர் இடத்தில் மற்ற அப்போஸ்தலர்களுக்கும் சேசுநாதர் சுவாமி அளித்திருக்கிறார்: (மத். 18, 18.)

மத்தேயு, 18-ம் அதிகாரத்தில், குற்றவாளியைப்பற்றி ஆண்டவர் சொல்லியிருப்பதாவது: (குற்றவாளியின் குற்றத்தையும் பிடிவாதத்தையும்) "அதைத் திருச்சபைக்குத் தெரியப்படுத்து; அவன் திருச்சபைக்கும் காது கொடாவிட்டால், அவன் உனக்கு அக்கியானியையும், ஆயக்காரனையும் போலிருக்கக்கடவான்" என்றார். ஆனால் இதில் கிறீஸ்துவன் எப்படி அக்கியானியைப்போலிருக்கக்கூடும்? அவன் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறதினிமித்தம் அவனுக்குக் கிறீஸ்துவனுக்குரிய முத்திரை இருந்தபோதிலும், திருச்சபையை விட்டு தள்ளப்படுவதால், எல்லா ஞான நன்மைகளிலும், பரலோக இராச்சியத்திற் கடுத்த காரியத்திலும் அவன் அஞ்ஞானியைப் போலிருப்பான். இஞ்ஞான முத்திரை ஒருபோதும் அழிவதில்லை; நரகத்துக்குப்போகும் கிறீஸ்துவர்களிடத்திலும், இம்முத்திரை இருக்கும்; இம்முத்திரை அழியாமலிருக்கும்போதே எப்படி நரகத்துக்குப்போகலாமோ, அப்படியே இம்முத்திரை அழியாமலிருக்கும்போதே திருச்சபையை விட்டுத்தள்ளப்பட்டிருக்கலாம்.

இதினால் தனக்குக் கீழ்ப்படியாத கிறீஸ்துவனை, திருச்சபையை விட்டுத்தள்ளிவைக்கும் அதிகாரத்தை சேசுநாதர் சுவாமி திருச்சபைக்குத் தந்திருக்கிறார்.

மேலும் சேசுநாதர்சுவாமி தம்முடைய இராச்சியத்தை, தம்முடைய அரசாங்கத்தை, இவ்வுலகில் ஸ்தாபித்தார். இவ்விராச்சியம், மற்றப்பூலோக இராச்சியங்களுக்கெல்லாம் மேலானது. இது பரலோகத்துக்கடுத்த இராச்சியம். இவ்வுலகத்திலிருக்கும் சாதாரண அரசாங்கங்களுக்கும் இராச்சியங்களுக்கும் குற்றஞ்செய்யும் தங்கள் பிரஜைகளைத் தண்டிக்க அதிகாரமிருக்கும்போது, சேசுநாதர் சுவாமி ஸ்தாபித்த தமது இராச்சியத்தில், இவ்வதிகாரத்தைக் கொடுக்காமல் போவாரா? இஸ்பிரீத்துசாந்துவுக்கு

விரோதமாய்ப் பொய் சொன்ன அன்னியாஸ் சப்பிராள் என்ற இருவருக்கும் அர்ச். இராயப்பர் வருவித்த தண்டனையைப் பாருங்கள்: (அப். நட. 5. 1-11). இன்னும் அர்ச். சின்னப்பர், கொரிந்து என்னும் பட்டணத்தில் தான் ஸ்தாபித்த கிறீஸ்துவர்களுக்கு மத்தியில் உள்ள பிடிவாதமுள்ள அக்கிரமியை திருச்சபையின் சமூதீதத்தைவிட்டுத் தள்ளி வைக்கிறார்: (1-கொரி. 5-ம் அதி.)

இதே அப்போஸ்தலர் மற்றநேக இடங்களில், குற்றவாளியைத் தண்டிக்கத் தனக்கதிகாரம் உண்டென்று, திருத்தமாய்க் கூறுகிறார். ஓர்தரம் கொரிந்தியரைப்பார்த்து "நான் உங்களிடத்தில் பிரம்புடன் பிரவேசிக்க வேண்டுமோ" (1-கொரி. 5-ம் அதி. 21) என்கிறார். அதே ஊர் ஜனங்களுக்கு தான் எழுதிய 2-ம் நிருபத்தில் சொல்லுகிறார்: "எல்லாக் கீழ்ப்படியாமைக்கும் நீதியுள்ள ஆக்கினை இடவும் ஆயத்தமாய் இருக்கிறோம்" (10 அ. 6) என்கிறார். தேசோலோனியருக்கு எழுதிய நிருபத்தில், "இந்நிருபத்தில் அடங்கிய எங்கள் வார்த்தைக்கு எவனாவது கீழ்ப்படியாதிருந்தால், அவனைக் குறிப்பிட்டு அவன் வெட்கப்படும்படி அவனோடு புழங்காதிருங்கள்" (2 தெ. 3 அ.14) என்று எழுதினார். திருச்சபை, இவ்வதிகாரத்தைத் துவக்கம் முதல் இதுவரை, கையாடி வந்திருக்கிறது. குற்றவாளிகளைச் சிறையிலடைத்தும் அவர்களுக்குப் பணத்தண்டனை விதித்தும், இன்னும் வேறுவிதத் தண்டனைகளாலும், அவர்களை ஒடுக்கிவந்திருக்கிறது. உலகமுடியுமட்டும் இவ்வதிகாரம் அதற்குச் சொந்தமாயிருக்கும்.

அதிகாரமுள்ளவர்கள், குற்றஞ்செய்தவனுடைய சீர்திருத்தத்திற்காகவும், குற்றத்தின் தண்டனைக்காகவும், குற்றவாளி சில ஞான நன்மைகளை இழக்கச்செய்வதே திருச்சபைத் தண்டனையாம் (2215 தி. சட்டம்).

திருச்சபைத் தண்டனைகள் ஞான சிட்சைகளென்றும் (Censura medicinalis), அபராதத் தண்டனைகள் என்றும் (pæna vindicativa), தண்டங்களென்றும் (pænalitates) மூன்று வகைப்படும் (2216 தி. ச.).

திருச்சபையில் இப்பேர்க்கொத்த தண்டனைகளை விதிக்க, யார்யாருக்கு அதிகாரமுண்டு? திருச்சபையில் சட்டங்களை ஏற்படுத்தவும், கற்பனைகளை விதிக்கவும் யாருக்கதிகாரமுண்டோ, அவர்களுக்கு தண்டனைகளை விதிக்கவும் அதிகாரமுண்டு (2220 தி. சட்.). அதாவது பாப்பானவரும் திருச்சபைப் பொதுச்சங்கங்களும், உலக முழுவதும் உள்ள கிறீஸ்துவர்கள் யாருக்கும் தண்டனை நியமிக்கலாம். பாப்பானவரின் 'அங்கீகாரத்தோடு கூட்டப்படும் மாகாண சங்கங்கள், அம்மாகாணத்திலுள்ள யாவருக்கும் தண்டனை ஏற்படுத்தலாம். மேற்றிராணியார் தன் மேற்றிராசனத்திலுள்ள எக்கிறீஸ்துவர்களுக்கும் தண்டனை விதிக்கலாம் (362 தி. ச.).

இவர்களில் யாராவது நியமித்த தண்டனையை, குருக்கள் கிறீஸ்துவர்களுக்கு அறிவிக்கலாமேயொழிய, மற்றப்படி தாங்களே ஓர் தண்டனையை விதிக்க குருக்களுக்கு யாதொரு அதிகாரமில்லை. விக்கர் ஜெனரலுக்கு முதலாய் யாதொரு விசேஷ அதிகாரம் பெற்றுக்கொண்டாலொழிய மற்றப்படி தண்டனைகளை ஏற்படுத்த அதிகாரம் ஒன்றுமில்லை. மேற்றிராணியார் ஆண்டவர் தான் ஏற்படுத்திய சட்டங்களையாவது, தனக்கு முன்னுலிருந்த மேற்றிராணிமார்கள் ஏற்படுத்திய சட்டங்களையாவது நிறைவேற்றாதவர்களுக்கு இவ்விவ்வித தண்டனைகளை விதிப்பேனென்று ஆஞ்ஞாபிக்கலாம், விதிக்கலாம்; அது போலவே விசேஷ காரணங்களினிமித்தம் இவ்விவ்வித சர்வேசுரனுடைய கற்

பனைகளையும் இவ்விவ்வித திருச்சபைச் சட்டங்களையும் அநுசரியாவிடில் இவ்வித்தகைய தண்டனைகளை விதிப்பேனென்று நியமித்து ஆஞ்ஞாபிக்கலாம் (2221 தி. ச.).

இவ்விச் சட்டத்தை மீறினால் இவ்விவ்வித தண்டனைகள் விதிக்கப்படுமென்று சட்டத்தில் ஏற்கனவே குறிக்கப்படாவிடினும், துர்மாதிரிகையை முன்னிட்டும் குற்றத்தின் விசேஷ கனகனத்தை யோசித்தும் மேற்றிராணியாரோ வேறு மற்ற அதிகாரமுள்ளவர்களோ யாதொரு எச்சரிக்கை கொடுக்காமலே குற்றம் நடந்தவுடனே குற்றவாளியைத் தண்டிக்கலாம் (2222 தி. ச.).

இவ்விக் குற்றத்திற்கு தண்டனை விதிக்கலா மென்று சட்டத்தில் குறித்திருந்தால், அதிகாரமுள்ளவர்கள் தங்களுடைய பிரியம்போல் விதிக்கலாம், அல்லது விதிக்காமலிருக்கலாம். ஆனால் இவ்விக்குற்றத்திற்கு தண்டனை விதிக்க வேண்டு மென்று சட்டத்தில் குறித்திருந்தால் அதிகாரமுள்ளவர்கள் தண்டனை விதிக்காமலிருக்க வொண்ணாது; ஆகிலும் தாங்கள் நன்மையாயிருக்குமென்று நினைக்கும்பட்சம் தண்டனையை உடனே ஆஞ்ஞாபிக்கலாம்; அல்லது கொஞ்சம் நாள் பார்த்து விதிக்கலாம்; குற்றவாளி திருத்தமடைந்து, அவன் காட்டிய துர்மாதிரிகைக்கு சரியான பரிகாரஞ் செய்து விட்டால், தண்டனையை விதிக்காமலிருக்கலாம், குறித்த தண்டனையைக் குறைக்கலாம், அல்லது குறித்த தண்டனைக்குப் பதில் வேறு தண்டனை நிர்ணயிக்கலாம் (2223 தி. ச.). எத்தனை குற்றங்களுண்டோ அத்தனை தண்டனை விதிக்கலாம் (2224 தி. ச.).

---

## 2-ம் அதிகாரம்.

## ஞான சிட்சைகள்.
## (De Censuris)

ஞானசிட்சைகள் திருச்சபைத் தண்டனைகளில் ஓர் வகுப்பு என்று சொன்னோம்.

ஞானசிட்சை என்றால் என்ன? ஞானஸ்நானம் பெற்ற மனிதன் குற்றஞ் செய்து அதில் பிடிவாதமாயும் நிந்தனையாயும் நிலைத்திருக்கும்போது விதிக்கப்படும் ஔஷதத்தை யொத்த ஞான தண்டனையாம்; இதினால் அம்மனிதன் பிடிவாதத்தை விட்டு விட்டு மனந்திரும்பி பாவப் பொறுத்தல் பெறும் வரை அவனுக்கு சில ஞான நன்மைகளும் ஞான நன்மைகளுக்கடுத்தவைகளும் கொடுக்கப் படமாட்டா (2241 தி. ச.).

ஓர் குற்றத்திற்கு விதிக்கப்படுவதினால் இது ஓர் தண்டனை; ஞான நன்மைகளை அநுபவியாதபடி தடுப்பதினாலும், ஞான அதிகாரத்தால் விதிக்கப்படுவதாலும், குற்றவாளியின் ஞான நன்மைக்காக ஏற்படுத்தப்படுவதினாலும், இது ஞான தண்டனை. ஞானஸ்நானம் பெற்றவர்கள்மேல் தான் திருச்சபைக்கு அதிகாரம் இருக்கிறபடியால், ஞானஸ்நானம் பெற்றுள்ள குற்றவாளிக்குத்தான் இத்தண்டனை விதிக்கப் படுகிறது. இது ஔஷதத்தையொத்த ஞான தண்டனை. ஏனெனில், பகையினிமித்தமும் பழியினிமித்தமுமல்ல, குற்றவாளியைத் திருத்தி ஞான சௌக்கியம் அவன் அடையும்படி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகையால் இது மருந்தைப்போன்ற ஓர் ஞான தண்டனையாம்.

இத்தண்டனை விதிப்பதற்கு குற்றம் எப்பேர்ப்பட்டதாயிருக்கவேண்டு மென்றால், சட்டத்தில் குறித்துள்ள வார்த்தைகளின் பிரகாரம் குற்றம் முற்றமுடிய முடிந்திருக்கவேண்டும் ; குற்றத்தைத் துவக்குவதற்கே சட்டம் சில தண்டனைகளைக் குறித்திருக்கலாம் ; அப்படி சட்டம் ஏற்கனவே குறிக்காவிடினும், அதிகாரமுள்ளவர் தொடங்கின குற்றத்தின் கனகனத்துக்குத்தக்கதுபோல் தண்டனை விதிக்கலாம் (2213 2235 தி. ச.). குற்றம் கனமானதாயிருத்தலவசியம். குற்றம் வெளிப்படையானதாயிருக்கவேண்டும் ; ஆகிலும் பிறர் அறிந்திருக்க வேண்டுமென்னும் அவசியமில்லை ; குற்றவாளியின் ஐம்புலன்களில் ஒன்றுக்கே எட்டக்கூடியதாயிருந்தால் போதும். உதாரணமாக விசுவாச சத்தியங்களில் ஒன்றை மனதிலே மாத்திரம் ஒருவன் வெறுத்துத் தள்ளுவானேயாகில், அது சாவான பாவமான போதிலும், ஞான சிட்சையால் தண்டிக்கப்படத்தக்க குற்றமல்ல ; இது உள்ளரங்கமான குற்றம். ஆனால் அவன் அச்சத்தியத்துக்கு விரோதமாய் பேசுவானேயாகில் எழுதுவானேயாகில், அவன் வார்த்தையை வேறொருவர் கேட்காவிடினும் அவன் எழுதியதை வேறொருவர் வாசியாவிடினும், அவன் குற்றம் வெளிப்படையான குற்றமே.

பிடிவாதமும் நிந்தனையும் எப்பேர்க்கொத்தது என்று பார்க்குமுன் ஞான சிட்சைகளிலுள்ள இருவகுப்பை அறிய வேண்டும். அதாவது (latae sententiae) தீர்க்கப்பட்ட ஞான சிட்சைகளும், (ferendæ sententiae) தீர்க்கும் ஞான சிட்சைகளுமாம். தீர்க்கப்பட்ட ஞான சிட்சைகள் என்றால் என்ன ? இவ்விவ்விதக் குற்றத்தைச் செய்தால் யார் என்ன சொன்னாலும் சொல்லாவிட்டாலும், அவன் அக்குற்றத்தை செய்த க்ஷணம் திருச்சபையை விட்டு புறம்பாகத் தள்ளப்படுவான், அல்லது அவன் பாவப்

பொறுத்தல் அடைய முடியாது என்று சட்டத்தில் ஏற்கனவே குறிப்பாய் நியமித்திருக்கும் தண்டனையாம். உதாரணமாக, பதிதர் பதிப்பித்திருக்கும் விசுவாசத்துக்கு விரோதமானவைகளடங்கியுள்ள புத்தகங்களை வாசிக்கிற கத்தோலிக்கர் திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஓர் கிறீஸ்துவன் இரகசியமாய் ஒருவருக்குந் தெரியாமல் இதை வாசிக்கலாம்; மேற்றிராணிமாரும் மற்றவர்களும் இதைப்பற்றி ஒன்றும் தெரியாததினால் ஒன்றும் சொல்லாமலிருக்கலாம்; ஆகிலும் அப்படி இரகசியமாய் வாசித்தவன் திருச்சபையை விட்டுத் தள்ளப்பட்டவன்; அவன் தேவநற்கருணை முதலிய தேவதிரவிய அநுமானங்களையும் பெறக்கூடாது; அவன் அக்குற்றத்தை ஒளித்து வைத்துக்கொண்டு மற்ற பாவங்களையெல்லாம் பாவசங்கீர்த்தனத்தில் சொல்ல, குருவானவர் பாவப்பொறுத்தல் கொடுத்தாலும், அவனுக்கு பாவப்பொறுத்தல் கிடையாது, அவன் கொண்டுபோன பாவமூட்டையோடும் ஓர் புதிய தீர்க்கப்பட்ட தேவதுரோகத்தோடுந்தான் திரும்புவான். இதுதான் ஞான சிட்சை. திருச்சபைச் சட்டங்களின் பிரகாரம் பாப்பானவரோ மேற்றிராணியாரோ விசாரித்து விதிக்கும் ஆக்கினை தீர்க்கும் ஞான சிட்சை என்று சொல்லப்படும். உதாரணமாக, ஓர் ஊரில் ஓர் மேற்றிராணியார் நியாயமான ஓர் கட்டளை கொடுத்திருக்கும்போது அதற்கு ஒருவன் கீழ்ப்படியாவிடில் அவனைத் தண்டிக்கும்படி திருச்சபைச் சட்டம் சொல்லியிருக்கிறது. இப்போர்க்கொத்த கீழ்ப்படியாத ஒருவனை அவ்வூர் மேற்றிராணியார் திருச்சபையை விட்டுத்தள்ளினாலாவது, அவனுக்குப் பாவப்பொறுத்தல் கொடுக்கமாட்டேனென்று சொன்னாலாவது, இத்தண்டனை தீர்க்கும் தண்டனையாம்.

இப்போது ஞான சிட்சைகளுக்காளாகிறதிற்கு எப்பேர்க்கொத்த பிடிவாதமும் நிந்தையும் வேண்டுமென்றால்,

தீர்க்கப்பட்ட ஞான சிட்சைக்காளாவதற்கு சட்ட நிந்தையாக அச்சட்டத்தை மீறுவதேபோதும்; தீர்க்கும் தண்டனைக்காளாவதற்கு அதிகாரமுள்ளவரால் எச்சரிக்கப்பட்டிருந்தும் தன் குற்றத்தை தொடர்ந்து செய்யும் பிடிவாதமும் வேண்டும்.

ஓர் மேற்றிராணியார் நியாயமாய் விதித்தாரா, அநியாயமாய் ஞான சிட்சைகளை தீர்மானித்தாரா, அளவோடு நியமித்தாரா, அளவுக்கு அதிகமாய் ஆஞ்ஞாபித்தாரா, என்று ஓர் குற்றவாளி நினைத்தால்; நியமிக்கப்பட்ட ஞான சிட்சை அவனைவிட்டு ஓடிப்போகிறதா? இல்லை. அவன் பாப்பானவருக்கு விண்ணப்பம் செய்துகொண்டாலும், அர்ச். பாப்பானவரிடமிருந்து பதில் வரும்வரை, அக்குற்றவாளி விதித்த சிட்சைக்கு ஆளானவனே; அத்தண்டனையை அநுபவித்தே தீரவேண்டும்; திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளப்பட்டால் திருச்சபைக்குப் புறம்பானவனே.

ஒருவன் மேற்றிராசன எல்லையைவிட்டு நீங்கி தற்காலம் இருக்கும்போதுமுதலாய் அவனுடைய மேற்றிராணியார் அவனுக்கு ஞான சிட்சைகளை விதிக்கலாமா? தன் மேற்றிராசன எல்லைக்குள் அவன் குற்றம் செய்திருந்தாலும்; குற்றவாளி மேற்றிராசன எல்லைக்கு வெளியே இருக்கும்போது, தன் மேற்றிராசனத்துக்கடுத்த காரியங்களில் குற்றம் செய்தாலும், அவனுடைய மேற்றிராணியார் அவனுக்கு ஞான சிட்சைகளை விதிக்கலாம் (1566, 1561 தி. ச.).

இன்னொரு மேற்றிராசனத்தைச் சேர்ந்தவன், வேறு மேற்றிராசனத்தில் ஏதோ கொஞ்ச நாளைக்கு வந்து அங்கே ஓர் குற்றஞ் செய்தால் புதிதாய் அவன் வந்திருக்கும் இடத்து மேற்றிராணியார் அக்குற்றத்துக்கு ஞானசிட்சைகளை விதிக்கலாம். உதாரணமாக, புதுச்சேரி மேற்றிராசனத்தைச்சேர்ந்தவன், கும்பகோணம் மேற்றிராசனத்

துக்கு வந்து ஓர் மாதமிருக்கும்போது எல்லாக் கிறீஸ்துவர்களுக்கும் பொதுவான ஓர் சட்டத்தை மீறிநடந்தால் கும்பகோணம் மேற்றிராணியார் அந்த குற்றவாளிக்கு ஞானசிட்சைகளை நியமிக்கலாம்.

யாவருக்கும் பொதுவான திருச்சபைச் சட்டங்களை தன் மேற்றிராசனத்தை விட்டுவிட்டு வேறாரிலிருக்கும் போது ஒருவன் மீறினல் அவன் எவ்வூரிலிருக்கிருனே அவ்வூர் மேற்றிராணியாரும் ஞான சிட்சைகளை விதிக்கலாம் (1566 தி. ச.); அவன் எம்மேற்றிராசனத்தைச் சேர்ந்தவனே அம்மேற்றிராசனத்து மேற்றிராணியாண்டவரும் அவனுக்கு ஞானசிட்சைகளை விதிக்கலாம் (1561 தி. ச.).

ஓர் மேற்றிராணியார் ஒருவனை திருச்சபையை விட்டுத் தள்ளி வைத்தால் அதினல் அவன் உண்மையாகவே திருச்சபையை விட்டு விலக்கப்பட்டிருப்பதற்கு, அம்மேற்றிராணியார் பரிசுத்தவானு யிருக்கவேண்டுமென்பது அவசியமென்று நம்புவது பைத்தியம். சாதாரணமாய் மேற்றிராணிமார்களெல்லாம் பரிசுத்தவான்களென்றுலும், எங்கே யாவது ஒருவர் பரிசுத்தவானல்லாமலிருக்கலாம், அவர் பெரும் பாவியாயிருந்தபோதிலும் அவர் திருச்சபையின் அதிகாரத்தோடு ஒருவனைத் திருச்சபையைவிட்டுத் தள்ளி வைத்தால் அவன் சகல விசுவாசிகள் முன்னும், சர்வேசுரன் முன்னும், திருச்சபையை விட்டுத் தள்ளப்பட்டவனே.

ஒருவன் ஓர் இடத்தில் ஒரு ஞானசிட்சைக்காளானனே யாகில், அவன் உலகத்தின் எக்கோடிக்குப்போனலும், அவனேடு அச்சிட்சை தொடருகிறது; அவன் எங்கும் அச்சிட்சைக்கு ஆளானவனே; சிட்சையை விதித்தவர் அவர் அதிகாரத்தைவிட்டு நீக்கப்பட்டாலும், அல்லது அவர் மரித்துவிட்டாலும், இன்னும் சிட்சைக்காளானவன், ஆளானவனே (2226 தி. ச.).

இராஜாதிபதிக்கும் அவர் மக்களுக்கும் அவருக்குப் பின்னால் அவர் பதவிக்கு வரவேண்டியவருக்கும், மேற்றிராணியார் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டிருக்கும், (சாமிநாதர், பிரான்சீஸ், கார்மேல், சேசுசபை முதலிய) பெரிய சந்நியாச சபையாருக்கும், கர்தினால்மாருக்கும், மேற்றிராணியாரல்ல, பாப்பானவர்தான் ஞான சிட்சை விதிக்கலாம் (2227, 1557 தி. ச.).

---

3-ம் அதிகாரம்.

---

## திருச்சபைப் பிரஷ்டம்
(De Excommunicatione.)

ஞானசிட்சைகளில் முதன்மையானது திருச்சபைப் பிரஷ்டம். திருச்சபை பிரஷ்டமென்பது அர்ச்சியசிஷ்டவர்களின் சமுதீதத்தை விட்டும், திருச்சபைக்குப் புறம்பாகவும் தள்ளப்படுவதாம். இவ்வுலகத்தில் கிறீஸ்துவனுக்கு வரக்கூடிய நிற்பாக்கியங்களில் எல்லாம் இது பெரிது.

ஏனெனில், திருச்சபைப் பிரஷ்டன் (திருச்சபைக்குப் புறம்பாகத் தள்ளப்பட்டவன்),

1. கோவில் கைங்கிரியத்தில் பங்காளியாகப் பாத்தியமில்லை (2259 தி. ச.); கடன் திருநாளானாலும் அவன் பூசை காணக்கூடாது, பூசை நேரத்தில் கோவிலுக்கு முதலாய்ப் போகக்கூடாது; அப்படிப்போனால் பாவம் (Ferreres II 1215.);

2. அப்படியே கோவிலில் பொதுவாக சொல்லப்படும் ஜெபங்கள், சுற்றுப்பிரகாரம், ஆசீர்வாத முதலியவைகளுக்குப் போகக்கூடாது (2259 தி. ச.) (Ibid.);

ஆகிலும், பிரசங்கங்களையும் ஞானோபதேசங்களையும் கேட்கலாம் (2259 தி. ச.) ; கோவில் சடங்கு ஒன்றுமில்லாத நேரத்தில் கோவிலுக்குப்போய் தனியே வேண்டிக்கொள்ளலாம் ; அச்சமயத்தில் கோவிலுக்கு வேறு கிறீஸ்துவர்கள் வந்து பிரத்தியேகமாய் வேண்டிக்கொண்டிருக்கும்போது முதலாய் தானும் போய் தனியே வேண்டிக்கொள்ளலாம் (Ibid.) ;

3. சர்வேசுரன் தன்பேரிலிரங்கி தனக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைக் கொடுக்கும்படி படம், சுரூபம், தீர்த்தம் முதலியவைகளை உபயோகிக்கலாம் ; ஆகிலும் அவைகளுக்குக் குறித்துள்ள பலன் இவனுக்குக் கிடையாது ; அவைகளை ஆசீர்வதித்ததினாலுள்ள பயனும் வராது.

4. தேவதிரவிய அநுமானங்களைப் பெறலாகாது, அவஸ்தைமுதலாய்ப் பெறலாகாது (2260 தி. ச.) ; அப்படிப் பெற்றால் பெரும் பாவம் ; திருச்சபைப் பிரஷ்டர்களுக்குத் தேவதிரவிய அநுமானங்களைக் கொடுக்கும் குருக்கள் கனமான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறார்கள் ;

5. திருச்சபைப் பிரஷ்டனுக்கு திருச்சபைப்பலன்கள் ஒன்றுங்கிடையாது. அப்படியே திருச்சபை உலகமெங்கும் செய்யும் ஜெபங்களிலும் இவனுக்கு யாதொரு பங்கும் கிடையாது (2262 தி. ச.) ;

6. திருச்சபைப் பிரஷ்டனுக்காகப் பொதுவில் வேண்டிக்கொள்ளக்கூடாது ; ஆகிலும் அவனுக்காகத் தனியே கிறீஸ்துவர்கள் வேண்டிக்கொள்ளலாம் (2262 தி. ச.) ;

7. திருச்சபைப் பிரஷ்டர்கள் ஞானத்தாய், தந்தையாக இருக்கக்கூடாது ; திருச்சபைச் சடங்குகளில் பங்காளியாய் நின்று ஒன்றுஞ் செய்யக்கூடாது (2263 தி. ச.) ;

8. திருச்சபைப் பிரஷ்டன் குருவாயிருந்தால் அவர் பூசை முதலாய் வைக்கக்கூடாது; தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றக்கூடாது; தீர்த்த முதலியவைகளை மந்திரிக்கக் கூடாது; ஆகிலும் யாதொருவன் சாகப்போகிற ஆபத்திலிருக்கும்போது அவனுக்குப் பாவப்பொறுத்தல் கொடுக்கலாம்; விசுவாசிகள் அவசியமான காரணமில்லாவிடில் திருச்சபை பிரஷ்டனுக்கப்பட்ட குருவிடமிருந்து தேவதிரவிய அநுமானங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடாது; கேட்க முதலாய்க் கூடாது; அப்படிக் கேட்டால் சாவான பாவம் (2261 தி. ச.);

9. திருச்சபை அடக்கம், திருச்சபைப் பிரஷ்டர்களுக்குக் கிடையாது; திருச்சபைப் பிரஷ்டர்களாய், கத்தோலிக்க அடக்கமின்றி உயிர்துறந்தவர்களுக்குப் பூசை முதலாய்ப் பகிரங்கமாய் செய்யவொண்ணாது (2260, 1240, 1241 தி. ச.);

10. திருச்சபைப் பிரஷ்டர்களில், சிலர் தீண்டாப் பிரஷ்டர்கள். (Excommunicatus vitandus).

தீண்டாப் பிரஷ்டர்களாக்குவதற்கு பரிசுத்தப் பாப்பானவருக்கு மாத்திரந்தான் அதிகாரமுண்டு. இத்தீண்டாப் பிரஷ்டர்களோடு விசுவாசிகள் உண்டல், கொடுத்தல் முதலிய உலோக சம்மந்தங்கள் முதலாய் வைத்துக்கொள்ளக் கூடாது (2258, 2267 தி. ச.);

இவையெல்லாம் திருச்சபைப்பிரஷ்டர்கள் இழக்கும் நன்மை.

14 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களை தீர்க்கப்பட்ட திருச்சபைப் பிரஷ்டர்களாக்குவதில்லை; அப்பேர்க்கொத்தவர்கள் யாதொரு குற்றஞ் செய்யும்பட்சம் வேறு ஆக்கினைகளால் அவர்களைத் தண்டிக்கவேண்டும். ஆனால் அப்பேர்க்

கொத்தவர்களைக் குற்றஞ்செய்யத் தூண்டினவர்களும், அவர்களுடைய குற்றத்துக்கு உடந்தையாய் நின்றவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்களாக்கப்படுவார்கள் (2230. தி. ச.).

கள்ள அறிவீனம், தீர்க்கப்பட்ட திருச்சபை சிட்சைகளினின்று ஒருக்காலும் காப்பாற்றுவதில்லை (2229 தி. ச.); அறிந்தால் மோசமென்று சட்டத்தை அறியாமலிருப்பது தான் கள்ள அறிவீனம். சட்டத்திலேயே, "தெரிந்தும்" "செய்யத்துணிந்தால்" "வேண்டுமென்று" முதலிய வார்த்தைகளிருக்கும் பட்சம், அத்தீர்க்கப்பட்ட திருச்சபை சிட்சைகளுக்காளாவதற்கு அச்சட்டம் தெரிந்திருக்கவேண்டும்; ஆதலால் சுத்த அறிவீனம் அச்சிட்சைக்கு ஆளாகாதபடி இரட்சிக்கிறது. சட்டத்தில் இவ்வார்த்தைகளில்லாவிடில் சுத்த அறிவீனம் அவர்களை இரட்சிக்கிறது. மூட அறிவீனம் தீர்க்கப்பட்ட ஞான சிட்சைக்காளாகாதபடி காப்பாற்றுவதில்லை (2229 தி. ச.). ஒருவன் தான் அறிய வேண்டியதை, வெட்கத்தினாலாவது, கவலையீனத்தினாலாவது, சோம்பேறித்தனத்தினாலாவது, கற்றறியாமலிருப்பது மூட அறிவீனமாம்.

அநேகம்பேர் ஓர் குற்றத்தைச் செய்ய உடந்தையாயிருந்தால், சட்டத்தில் தண்டனைக்கு ஒருவனைமாத்திரம் குறித்திருந்தாலும், குற்றத்திற்கு உடந்தையாய் நின்ற யாவரும் அதே சிட்சைக்காளாகிறார்கள் (2231 தி. ச.). அதாவது அக்குற்றத்தைச்செய்யக் கற்பிப்போரும், யாருடைய உதவி யில்லாவிடில் அக்குற்றம் நிறைவேறி யிருக்காதோ அவர்களும், அக்குற்றத்திற்கு உடந்தையாய் நின்று முடித்தவர்களும், குற்றம் செய்தவர்களைப்போலவே அதே தண்டனைக்காளாகிறார்கள் (2209 தி. ச.).

4-ம் அதிகாரம்.

## தீர்க்கப்பட்ட திருச்சபைப் பிரஷ்டம்.

(Excom. Latae Sententiae)

முன் சொன்னதுபோல் பின்னால் வரும் குற்றம் செய்கிறவர்கள், யார் சொன்னாலும், சொல்லாவிடினும், திருச்சபைப் பிரஷ்டர்களாக்கப்படுகிறார்கள்.

†1. மந்திரிக்கப்பட்ட ஓஸ்தியையாவது திரு இரத்தத்தையாவது கீழே எறிகிறவர்களும், கெட்ட எண்ணத்தோடு அதைக் கொண்டுபோகிறவர்களும், வைத்திருக்கிறவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள். எறிகிறதென்றால், தரையிலாவது, நெருப்பிலாவது போடுதல், அவமரியாதையாய் அதைக் கையாடுதல் முதலியனவாம்; அத்தைப் பழிக்காவாவது அத்தால் பண முதலியது வாங்கவாவது, பாத்திரத்திலிருந்தாவது நன்மை வாங்கினவுடன் வாயிலிருந்தாவது எடுத்தலுமாம் (2320 தி. ச.).

2. பாவசங்கீர்த்தன இரகசியத்தை துணிந்து வெளியிடுங் குருவானவர் திருச்சபைப் பிரஷ்டர் (2369.).

*3. கத்தோலிக்கராயிருந்து, பதிதர், பிரிவினைக்காரராய் மாறிப்போனவர்களும் கிறிஸ்து வேதத்தை முழுதும் விட்டுவிட்டு இதர மதஸ்தராகிவிட்டவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2314 தி. ச.).

---

† இதையும் இதற்குப் பின்னால் வரும் சிட்சையையும் மன்னிக்க அர்ச். பாப்பானவருக்குத்தான் அதிக விசேஷ விதமாய்ச் சுதந்தரம்.

* இதையும் இதற்குப்பின் வரும் ஏழு சிட்சைகளையும் மன்னிக்க அர்ச். பாப்பானவருக்குத்தான் விசேஷ விதமாய்ச் சுதந்தரம்.

வேத சத்தியத்திற்கு விரோதமானவைகளை சொல்லு தல், எழுதுதல், பாப்பானவருடைய அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளாதல், அவருக்குக் கீழ்ப்படிய மாட்டேனென்றல், முதலியவையும் இதினுல் குறிக்கப்பட்ட குற்றங்களாம்.

4. கத்தோலிக்கராயிருந்து அதை முழுதும் விட்டு விட்டவர்கள், பிரிவினைக்காரர்கள், பதிதரானவர்கள், விசுவாச சத்தியத்துக்கு விரோதமானவைகளையாவது அர்ச். பாப்பானவருடைய அதிகாரத்துக்கு விரோதமானவைகளை யாவது நிலைநிறுத்தத் தேடுகிறவர்கள் முதலியவர்களுடைய புஸ்தகங்களைப் பதிப்பவர்களும், அர்ச். பாப்பானவர் கண்டனம் செய்த புஸ்தகங்களை நல்லவைகளென்று பாராட்டு கிறவர்களும், அப்புஸ்தகங்களை சரியான உத்தரவின்றி வேண்டுமென்று வாசிக்கிறவர்களும் யாவரும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2318 தி. ச.).

புத்தகமென்றதினுல் பத்திரிகைகளுக்கும் அதே மாதிரியே; இங்கு குறிக்கப்பட்ட புத்தகங்களுக்கும் பத்திரி கைகளுக்கும் இரண்டு குணங்களுண்டு: ஒன்று கத்தோலிக் மதத்தை விட்டுப்போனவர்கள், அல்லது பதிதர் அல்லது பிரிவினைக்காரரால் எழுதப்பட்டிருக்கவேண்டும்; மற்றொ ன்று கத்தோலிக் சத்தியத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் விரோதமானவைகளைப்பற்றி எழுதப்பட்டிருக்கவேண்டும்.

5. அரசாளும் பாப்பானவர் ஓர் கட்டளையோ, கற்பனையோ விதித்திருக்கும்போது, அதற்கு விரோதமாய் ஓர் பொது சங்கத்தைக் கூட்டத்தேடுகிறவர்கள் யாராயிருந்தாலுஞ் சரி திருச்சபைப் பிரஷ்டர்கள் (2332 தி. ச.).

6. திருச்சபையின் சுதந்திரத்துக்கும் சுயாதீனத்துக் கும் விரோதமாய், தீர்மானங்களையும், கட்டளைகளையும், சட்டங்களையும் ஏற்படுத்துகிறவர்களும், திருச்சபை அதி

காரிகள் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தாவண்ணம் எவ் விதத்தாலும் தடுக்கவேணுமென்று அதற்கு உதவியாக இலௌகிக அதிகாரிகளைத் தேடுகிறவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2334 தி. ச.).

"திருச்சபைச் சுதந்திரத்துக்கும் சுயாதீனத்துக்கும் விரோதமென்னும்போது," "ஞானோபதேசம் சொல்லிக் கொடுத்தல், கோவிலுக்கு வேண்டிய சொத்துகளை அடைதல், வைத்திருத்தல், கோவிலுக்கு வெளியில் சுற்றுப்பிரகாரம், ஜெபம் செய்தல் முதலிய திருச்சபைக்கடுத்த விஷயத்திலும்" என்று அர்த்தம்கொள்ளவும்; அதுபோலவே மடங்களை இலௌகீக அதிகாரத்துக்கு உட்படுத்தத் தேடுதல் முதலியனவுமாம். திருச்சபை அதிகாரத்தை செலுத்துவோரையாவது, அவர் உற்றார், உறவினரையாவது பயமுறுத்தித் தடுப்பதும், அல்லது அவருக்குக் கீழ்ப்பட்ட திருச்சபை உத்தியோகஸ்தர்களை அவர்கள் வேலையைச் செய்யாதபடி தடுத்தலுமாம்.

7. தங்கள் சொந்த மேற்றிராணியாரை இலௌகிக நீதிஸ்தலத்துக்குக் கொண்டுபோகத்துணிந்தவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2341 தி. ச.).

8. பாப்பானவருடைய ஸ்தானாதிபதியின் மேலாவது, கர்தினால்மார்களின் மேலாவது, எந்த மேற்றிராணியார் மேலாவது பலாத்காரமாய்க் கைவைக்கிறவர்கள் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2343 தி. ச.). கைவைத்தல் என்றால், கையாலாவது, வேறெவ்விதத்திலாவது அடித்தல், காயப்படுத்தல் முதலியனவாம்.

9. அர்ச். பாப்பானவரிடமிருந்து வந்ததாக பொய்க் கடிதம், கட்டளைகளைக் கற்பிதம் செய்கிறவர்களும், தெரிந்திருந்தும் அவைகளை உபயோகிக்கிறவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2360 தி. ச.).

10. குருவானவர் பாவசங்கீர்த்தனத்தில் பாவத்துக்குத் தூண்டினதாக அவனை சிரேஷ்டர்களிடம் தாங்களேயாவது, மற்றவர்களைக்கொண்டாவது பொய்யாகக் குற்றம் சாட்டுகிறவர்கள் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2363 தி. ச.).

†11. பலன்களைக்கொண்டு பணம் சம்பாதிக்கிறவர்கள் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2327 தி. ச.).

12. திருச்சபைக்கும், நியாயமாய் ஏற்பட்டுள்ள தேச அதிகாரத்துக்கும் விரோதமாய் எழும்பும்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ள இரகசியசபை முதலிய கெட்ட சபைகளில் சேர்ந்திருப்பவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2335 தி. ச.). இப்போர்க்கொத்தவர்கள் பாவப்பொறுத்தலடையுமுன், இச்சங்கத்தின் அங்கத்தினராயிருப்பதை மெய்யாகவே விட்டுவிடவேண்டும்; அச்சங்கங்களையும், சபைகளையும் துவேஷிக்கவேண்டும்; அச்சபைக்குரிய அடையாளம், புத்தகம், எழுத்து முதலியவைகளை பாவப்பொறுத்தல் கொடுக்கப்போகும் குருவானவர் கையில் கொடுத்துவிடவேண்டும்; குருவானவர் அவைகளைத் தன் மேற்றிராணியாராண்டவருக்கனுப்பிவிடுவார்; இது முடியாதபட்சத்தில் அவைகளை எரித்து விடுவார்.

13. மேலேகண்ட முதல் பத்து நம்பர்களில் கூறப்பட்ட சிட்சைகளிலிருந்து விடுதலைகொடுக்க அதிகாரமில்லாத குருக்கள், அவைகளுக்கு துணிந்து பொறுத்தல் கொடுத்தால் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2338 தி. ச.).

14. தீண்டாத் திருச்சபைப் பிரஷ்டர்களுக்கு அவர்கள் குற்றத்தில் உதவிசெய்து ஆதரிக்கிறவர்களும், இப்பிரஷ்டர்களை திருச்சபைச் சடங்குகளிலிருக்க ஏற்றுக்கொள்ளும் குருக்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2338 தி.ச.).

---

† இதையும் இதற்குப் பின்னால் வரும் ஏழு சிட்சைகளையும் மன்னிக்க அர்ச். பாப்பானவருக்குத்தான் சுதந்தரம்.

15. மேலே 7-ம் நம்பரில் குறிக்கப்பட்டவர்களன்னியில் வேறெந்த மேற்றிராணியாரையாவது, பெரிய சந்நியாச சபைகளின் சிரேஷ்டாதிபதிகளையாவது இலௌகிக நீதிஸ்தலங்களுக்குக் கொண்டுபோகத் துணிந்தவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2341 தி. ச.).

16. அடைபடு கன்னியர் (cloistered nuns) மடங்களில் பிரவேசிக்கும் ஆண்களும், பெண்களும், அவர்களை உள்ளே கொண்டுபோகிறவர்களும், அடைபடு கன்னியர் மடங்களிலுள்ள துறவிகளில் வெளியேறுகிறவர்களும்; சந்நியாசிகள் மடங்களின் அடைப்பைத் தாண்டிப் போகும் பெண்பாலரும், அவ்வடைப்புக்குள் பெண்களைப் போகச் சொல்லுகிறவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2342 தி. ச.).

17. யாதொருவன் தானாகவென்கிலும், பிறரைக் கொண்டென்கிலும், அசையும்பொருள் அசையாப்பொருளாகிய எவ்வித திருச்சபைச் சொத்தையும் தனது சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொண்டால், அல்லது திருச்சபைச் சொத்தினின்று வரும் பலனையும், வரும்படியையும் அதற்குச் சுதந்தரமுள்ளவர்களுக்குச் சேராதபடி தடங்கல் பண்ணினால் அவன் திருச்சபைப் பிரஷ்டன் (2346 தி. ச.).

18. சப்டீக்கன், டீக்கன், குருப்பட்டம் பெற்றவர்களும், ஆடம்பர வார்த்தைப்பாடு கொடுத்த சந்நியாசிமார், கன்னியாஸ்திரிகளும் கலியாணம்செய்யத் தேடுவார்களேயாகில், திருச்சபைப் பிரஷ்டர்கள் (2388 தி. ச.) இவர்கள் மெய்யான கலியாணஞ்செய்ய முடியாது; ஆதலால் செய்யத்தேடுவதென்றால், கலியாணமாகப் பாவித்து இன்னொருவருடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டால் போதும், குற்றத்துக்குள்ளாகிறார்கள். அதுபோலவே மேற்சொன்னவர்களோடு யாராவது கலியாணஞ்செய்யத் தேடுவார்களே

யாகில் அவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2388 தி. ச.).

*19. கத்தோலிக்கரல்லாத அதிகாரிமுன் (திருச்சபைச் சட்டத்துக்கு விரோதமாய்) கலியாணத்தை நிறைவேற்றுகிறவர்களும் (2319 தி. ச.);

20. தங்கள் பிள்ளைகளில் எல்லோரையுமாவது, சிலரையாவது கத்தோலிக்குத் திருச்சபைக்குப் புறம்பாய் வளர்க்கப்பட வேண்டுமென்று ஒப்பந்தம்பண்ணிக்கொண்டு விவாகம் செய்கிற கத்தோலிக்கரும் (2319 தி. ச.);

21. அறிந்தும் கத்தோலிக்கரல்லாத போதகரிடம் ஞானஸ்நானம்பெற தங்கள் பிள்ளைகளைக் கொடுப்பவர்களும் (2319 தி. ச.);

22. கத்தோலிக் வேதமல்லாத இதர மதங்களில் அறிந்தும், தங்கள் பிள்ளைகள் வளரும்படி அவர்களைக் கொடுக்கும் கத்தோலிக் தாய் தந்தையரும், போஷகர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2319 தி. ச.).

23. தான்சர் அல்லது தலைப்பட்டமாவது, அதற்கு மேலெந்தப் பட்டமாவது பெற்றவர்கள்மேலும், கன்னியர், சந்நியாசிகள்மேலும் பலாத்காரமாய்க் கைவைக்கிறவர்கள் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2343 தி. ச.).

கைவைக்கிறதென்றால், அடிமுதலியவைகளால் சரீரத்துக்குத் துன்புறுத்தல்; அவர்களை எங்கேயாவது அடைத்துவைத்தல் முதலியவைகளால் அவர்களுடைய சுயாதீனத்துக்குப் பங்கம் வருத்துவித்தல்; அவர்களுடைய வஸ்திரத்தைக் கிழித்தல், மண் சேற்றால் அசங்கிதம் செய்தல்; அவர்கள் வைத்திருக்கும் பையைப் பிடுங்குதல், அவர்

* இதையும் இதற்குப்பின் வரும் ஏழு சிட்சைகளையும் மன்னிக்க மேற்றிராணியார் பதவியில் இருப்பவருக்குச் சுதந்தரம்.

கள் போகும் வண்டியைப் பலாத்காரமாய் நிறுத்தல் முதலியவைகளால் அவர்களுக்கு அவமானம் வருத்துவித்தல் முதலியவைகளென்று அறியவும்.

24. கருவை அழிப்பவர்கள் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2350 தி. ச.). அழிக்கவேண்டுமென்னும் கருத்துடன் என்ன செய்தாவது அழிப்பவர்கள். அழிப்பவர்களென்றால், அழிக்கும்படி புத்திசொல்லுகிறவர்கள், மருந்து கொடுப்பவர்கள், மருந்தை உட்கொள்ளும் தாய் யாவரும் திருச்சபையினின்று தள்ளப்பட்டவர்களே.

25. துறவற அந்தஸ்தில் நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தபின், திரும்பிவரக்கூடாதென்ற எண்ணத்தோடு மடத்தைவிட்டு வெளியேறுகிறவர்களும், நியாயமான கருத்தோடு வெளியே போனாலும் மடத்துக்குத் திரும்பிப் போகக்கூடாதென்ற கருத்துடன் வெளியே தங்குகிறவர்களும் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2385 தி. ச.). எச்சமயம் இக்கெட்ட கருத்து வெளிப்படையானதோ அச்சமயம் முதல் இத்தண்டனைக்குள்ளாகிறார்கள்.

26. எம்மடத்திலாவது சாதாரண நித்திய வார்த்தைப்பாடு கொடுத்தவர்கள் கலியாணம் செய்தால், அல்லது அவர்களோடு வேறொருவர் கலியாணம் செய்தால், திருச்சபைப் பிரஷ்டர்கள் (2388 தி. ச.).

27. யாதொரு அங்கிகாரமின்றி வேதாகமங்களின் புத்தகங்களையாவது, அவைகளுக்கு குறிப்பாவது, உரையாவது பதிக்கும் பதிப்பாசிரியரும் ஆக்கியோரும் திருச்சபைப் பிரஷ்டர் (2318 தி. ச.).

28. அவிசுவாசிகள், கத்தோலிக் மதத்தை விட்டுவிட்டவர்கள், பதிதர், பிரிவினைக்காரர், திருச்சபைப் பிரஷ்டர் முதலியவர்களுக்குத் திருச்சபை அடக்கங் கொடுக்கும்

படி ஆஞ்ஞாபிப்பவர்களும் கட்டாயப்படுத்துகிறவர்களும் திருச்சபைப் பிரஷ்டர் (2339 தி. ச.).

29. திருச்சபைச் சொத்தை அகற்றும்விதத்தில் அர்ச். பாப்பானவருடைய தீர்மானத்துக்கு விரோதமாய்த் தெரிந்தும் நடக்கிறவர்கள் திருச்சபைப் பிரஷ்டர் (2347 தி. ச.).

30. ஆண்களைக் குருக்களாகவும்; ஆண்களையும் பெண்களையும் துறவிகளாகவும், சாதாரண வார்த்தைப் பாடோ, ஆடம்பர வார்த்தைப்பாடோ தற்காலத்திற்காகிலும் நித்தியத்திற்கென்கிலும் கொடுக்குப்படி கட்டாயம் செய்கிறவர்கள் திருச்சபைப் பிரஷ்டர்கள் (2352. தி. ச.).

மேற்சொன்ன முப்பதும் தீர்க்கப்பட்ட திருச்சபைப் பிரஷ்டம்; ஆதலால் மற்றவர்கள் சொன்னாலும் சொல்லா விட்டாலும் அக்குற்றத்தைக் கட்டிக்கொள்ளுகிறவர்கள் கட்டிக்கொண்ட அக்ஷணமே திருச்சபைப்பிரஷ்டர்கள்.

---

5-ம் அதிகாரம்.

---

## தீர்க்கும் திருச்சபைச் சிட்சை.

(Ferendae sententiae.)

திருச்சபைச் சட்டத்திலேயே இது தீர்க்கப்பட்ட ஞான சிட்சை என்று சொல்லப்படாத மற்ற ஞான சிட்சைகளெல்லாம் தீர்க்கும் ஞான சிட்சைகளே. இத்தீர்க்கும் ஞான சிட்சைகளில் (சிட்சை விதிக்க முன்னால் கூறப் பட்ட) அதிகாரமுள்ளவர்கள் நீதிபதிகளைப்போல தீர்க்கிறார்கள். தீர்க்கும் சிட்சைகளை நியமிக்கக்கூடிய சில சந்தர்ப் பங்களை திருச்சபை சட்டமே காண்பித்திருக்கிறது.

1. தேவதூஷணம் சொல்லுகிறவர்களும், (சர்வேசுரன்மேல் ஆணைவைத்து) பொய்ச் சத்தியஞ் செய்துகொடுக்கிறவர்களும் மேற்றிராணியாரால் தகுந்தபடி தண்டிக்கப்படக்கடவார்கள் (2323 தி. ச.).

2. சர்வேசுரனுக்குத் தப்பிதமான ஆராதனையையும், பொய்த் தேவதைகட்கு தேவாராதனையையும் செலுத்தினவர்களும், தேவதுரோகம் கட்டிக்கொண்டவர்களும் குற்றத்தின் கனகனத்துக்குத் தகுந்தாப்போல் மேற்றிராணியாரால் தண்டிக்கப்படக்கடவார்கள் (2325 தி. ச.).

3. பாப்பானவராவது, மேற்றிராணியார் ஸ்தானத்திலிருப்பவராவது விதிவிலக்குகளை நியாயமாய்க் கட்டளையிடும்போது கீழ்ப்படியமாட்டேனென்று பிடிவாதம் செய்கிறவர்கள் குற்றத்தின் கனகனத்திற்குத் தகுந்தாப்போல் ஞான சிட்சைகளாலும் வேறு சரியான ஆக்கினைகளாலும் தண்டிக்கப்படக்கடவார்கள். பாப்பானவர், அவர் ஸ்தானாதிபதி, சொந்த மேற்றிராணியார் முதலியவர்களுடைய அதிகாரத்துக்கு விரோதமாகவென்கிலும் அவர்கள் கொடுக்கும் நியாயமான கட்டளைக்கு விரோதமாகவென்கிலும் சதிமானஞ் செய்பவர்களும், மேற்சொன்ன அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியவேண்டாமென்று அவர்களுடைய பிரஜைகளைத் தூண்டிவருகிறவர்களும் ஞான சிட்சைகளாலும் சரியான ஆக்கினைகளாலும் தண்டிக்கப்படக்கடவார்கள் (2331 தி. ச.).

4. திருச்சபையின் அதிகாரம் செலுத்தப்படாதபடிக்கு ஜனங்களை எழுப்பி, தன் பாரிசமாக வெளிப்படையான மனு எழுதும்படி தூண்டி, வார்த்தையாலாவது எழுத்தாலாவது ஜனங்களை உற்சாகப்படுத்தும் பங்கு சுவாமிமார் குற்றத்தின் கனகனத்துக்குத் தகுந்ததுபோல் மேற்றிராணி

யார் அபிப்பிராயத்தின்படி தண்டிக்கப்படக்கடவார்கள் (2337 தி. ச.).

அதுபோலவே பங்குக்கு நியாயமாய் நியமிக்கப்பட்ட பங்குசுவாமியார் தன் பங்கில் நுழையாதபடி தடுக்க ஜனங்களை எந்தவிதத்திலாவது ஏவிவிடும் குருவையும் மேற்றிராணியார் தண்டிக்கக்கடவார் (2337. தி. ச.).

5. யாதொருவன் தானே நேராகவாவது மற்றப்படி யாவது பத்திரிகைகளிலும், பயிரங்கமான உபந்நியாசங்களிலும், துண்டுப்பிரசுரங்களிலும் ; பாப்பானவரையாவது, யாதொரு கர்தினாலையாவது, பாப்பானவருடைய ஸ்தானாதிபதிகளில் ஒருவரையாவது, உரோமை பரிசுத்த சங்கங்களையாவது, பரிசுத்த பாப்பானவரின் நீதிஸ்தலங்களையாவது, அவைகளின் பெரிய உத்தியோகஸ்தர்களையாவது, சொந்த மேற்றிராணியாரையாவது நிந்தித்தாலும் ; மேற்றிராணியாரண்டவருடைய நிபந்தனை தீர்மானம் தீர்ப்பு கட்டளைக்கு விரோதமாக பகையையும், பிரிவையும் ஏற்படுத்தினாலும் ; பங்குள்ளவர் கேட்டுக்கொள்ளாவிட்டாலும், தன் கடமையை நிறைவேற்றுவதற்காக, அவன் பரிகாரஞ் செய்யும்படி ஞான சிட்சையினால் வற்புறுத்தி குற்றத்தின் கனகனத்திற்கும், துர்மாதிரிகையின் பரிகாரத்திற்கும் தகுந்தாப்போல் சரியான ஆக்கினையாலும் அபராத தண்டத்தாலும் தண்டிக்கப்படக்கடவார்கள் (2344 தி. ச.).

6. பத்தியான காரியங்களுக்கு கொடைகளாகவாவது மரணசாதனத்தின் மூலமாகவாவது வேறு எவ்விதத்திலாவது பொருள் பெற்றுக்கொண்டு பிரமாணம் மீறி அப்பத்திக்கடுத்த காரியங்களை செய்யத் தவறுகிறவர்களை மேற்றிராணியார் ஞான சிட்சைகளாலும் வேறு ஆக்கினைகளாலும் தண்டித்து அக்காரியங்களை நிறைவேற்றும்படி கட்டாயப்படுத்தக்கடவார் (2348 தி. ச.).

7. மேற்றிராணியார் நியமிக்கும் பலவித வரிகளைக் கொடுக்கமாட்டோமென்கிறவர்கள் அவைகளைக்கொடுக்கும் வரை தண்டிக்கப்படக்கடவார்கள் (2349, 1507 தி. ச.).

8. கலியாணம் செய்யும்பொருட்டாவது அக்கிரம ஆசையின்பொருட்டாவது பிரியமில்லாத பெண்ணை தந்திரமாகவாவது பலாத்காரமாகவாவது கொண்டுபோகிறவனும், தாய் தகப்பன் போஷகர்கள் சம்மதியாதபோது 21 வயதுக்குக் குறைந்த பெண்ணை அவள் சம்மதித்தாலும் கொண்டுபோகிறவனும் (இக்குற்றத்திற்கு குறித்துள்ள தண்டனையோடு வேறு) தண்டனைகளாலும் குற்றத்தின் கனகனத்துக்குத் தகுந்தபடி ஒடுக்கப்படட்டும் (2353 தி. ச.).

9. வார்த்தையாலாவது எழுத்தாலாவது வேறெந்த விதத்திலாவது பிறருக்குப் பங்கம் வருத்துவித்தவனையும் பிறருடைய நல்ல பேரைக் கெடுத்தவனையும், சரியான பரிகாரம் செய்யக் கட்டாயப்படுத்துவதோடு, சரியான ஆக்கினையாலும் அபராத தண்டத்தாலும் சிட்சிக்கவேண்டும் (2355 தி. ச.).

10. தன் மனைவி (அல்லது தன் புருஷன்) இருக்கும்போதே வேறொரு கலியாணம் செய்து மேற்றிராணியார் எச்சரித்தபின்னும் துர்நடத்தையை விடாதவர்கள் குற்றத்தின் கனகனத்துக்குத் தகுந்தாப்போல், திருச்சபைப் பிரஷ்டத்துக்காவது நிஷேதத்துக்காவது உட்படக்கடவார்கள் (2356 தி. ச.).

சட்டத்தில் குறித்த இக்குற்றங்களைத்தவிர வேறு குற்றங்களுக்கும் முன்சொன்னதுபோல் அதிகாரமுள்ளவர்கள் (பாப்பானவரோ, மேற்றிராணியாரோ) தீர்க்கும் ஞான சிட்சைகளை விதிக்கலாம்.

---

## 6-ம் அதிகாரம்.

# நிஷேதம். (2268-2277 தி. ச.)

## (De Interdicto)

விசுவாசிகள் திருச்சபை சமூகத்தைவிட்டுத் தள்ளப் படாவிடினும், சில ஞான நன்மைகளை அடையாதபடி அவர்களை அகற்றிவைக்கிற ஞான சிட்சைதான் நிஷேதம். இது ஞான சிட்சைகளில் ஒன்று. ஆள் நிஷேதம், இட நிஷேதம் என்று இருவகைப்படும். இன்னும் இவை இரண்டும் பொது நிஷேதம், தனி நிஷேதம் என்று இருபால்படும். ஆள்களைக் கூட்டமாகவாவது தனியே குறிக்கப்பட்ட ஓர் ஆளையாவது சில ஞான நன்மைகளினின்று அகற்றினால் அது ஆள் நிஷேதம். குறிக்கப்பட்ட இடத்தை அகற்றினால் அது இட நிஷேதம். (ஓர் தேசம் ஓர் மேற்றிராசனம் முதலிய) பொதுவான இட நிஷேதத்தையும் பொதுவான ஆள் நிஷேதத்தையும் பாப்பானவர்தான் இடலாம். மேற்றிராசனத்திலுள்ள குறித்த இடத்தின்மேலும், குறித்த ஆள் மேலும் மேற்றிராசனத்திலுள்ள ஓர் பங்கிலும் பங்கிலுள்ள எல்லா கிறீஸ்துவர்கள்மேலும் மேற்றிராணியார் இடலாம்.

ஓர் இடத்தின்மேல் நிஷேதமிருந்தால், அங்கு சாகிறவர்களுக்குமாத்திரம் தேவதிரவிய அனுமானங்களைத் தரலாம். அவ்விடத்தில் மற்றவர்களுக்கு தேவதிரவிய அனுமானங்கிடையா. தீர்த்தம் ஆசீர்வாதம் முதலிய தேவதிரவிய அனுமானங்களுக்கு அடுத்தவைகளும் கிடையா. கோவில் மணி முதலியவைகள் அடிபடாது. பூசை முதலியது. கிடையா. கோவில்கள் அடைபட்டிருக்கும். கோவில் சடங்குகளே கிடையா. ஆகிலும் தேவநற்கருணைத் திருநாள் தவிர, மற்ற மூன்று கடன் திருநாட்களி

லும், உயிர்த்த திருநாளிலும் சடங்குகள் ஆடம்பரமின்றி நடக்கலாம். ஆகிலும் ஆடம்பர மெய்விவாக ஆசீர்வாதம் நடைபெறாது. ஆள் நிஷேதமாயிருந்தால், திருச்சபைப் பிரஷ்டர்களைப்போலவே, பிரசங்கத்துக்குமாத்திரம் போகலாம்; தேவதிரவிய அனுமானங்களைப் பெறக்கூடாது; திருச்சபைஅடக்கம் கிடையாது.

ஆள் நிஷேதமோ, இட நிஷேதமோ இருக்கும்போது செய்யக்கூடாததைச் செய்தால், கனமான பாவமாகும். இதைப்பற்றி நம்நாட்டில் அதிகம் சொல்ல அவசியமில்லை.

---

## 7-ம் அதிகாரம்.

---

## ஞானசிட்சைகளுக்கு மன்னிப்பு.

(De absolutione a censuris)

ஞானசிட்சைக்காளானவன் அதைவிட்டு நீங்கவேண்டுமேயாகில், அந்த ஞானசிட்சைக்கு மன்னிப்பு அடைய வேண்டும். தேவதிரவிய அனுமானங்களைப் பெறாதபடி விலக்கும் (திருச்சபைப் பிரஷ்டம், நிஷேதம் முதலிய) ஞானசிட்சைகளுக்கு பாவசங்கீர்த்தனத்தின் மூலமாகவாவது, பாவசங்கீர்த்தனத்துக்கு வெளியிலாவது மன்னிப்பு அடையலாம். பாவசங்கீர்த்தனத்துக்கு வெளியில் ஓர் சிட்சைக்கு மன்னிப்படைந்தால், அது பாவசங்கீர்த்தனத்திலும் அந்த ஞான சிட்சைக்கு மன்னிப்படைந்ததுபோலாம். பாவசங்கீர்த்தனத்தில் மன்னிப்படைந்தால்; துர்மாதிரிகைக்குப் பரிகாரஞ்செய்தபின் பாவசங்கீர்த்தனத்துக்கு வெளியிலும் அந்த ஞானசிட்சைக்கு மன்னிப்படைந்தது போல் பாவிக்கலாம். ஆகிலும் இப்படிப் பாவசங்கீர்த்தனத்தில் மன்னிப்படைந்ததாக பாவசங்கீர்த்தனத்துக்கு வெளி

யில் உருஜூப்படுத்தாவிடில், சிட்சை விதித்த அதிகாரி பாவ சங்கீர்த்தனத்துக்கு வெளியிலும் மன்னிப்படையவேண்டு மென்று சொன்னுல் அவ்வதிகாரியானவர் சொல்லுகிற ஏற் பாட்டிற்குப் பணிந்துதீரவேண்டும் (2251 தி. ச.). பாவ சங்கீர்த்தனத்துக்கு வெளியில் ஓர் ஞான சிட்சைக்கு மன் னிப்படையும்போது, மன்னிப்புக் கொடுப்பவனைவிட்டுப் பிரிந்து தூர இருந்தபோதிலும், செய்யவேண்டிய பரிகாரங் களையெல்லாம்செய்து மன்னிப்படையலாம். பாவசங்கீர்த் தனத்தில் மன்னிப்படையவேண்டுமேயாகில், மன்னிப்பவ ரும் மன்னிக்கப்படுகிறவரும் அருகில் இருப்பதவசியம் பாவசங்கீர்த்தனததுக்கு வெளியில் மன்னிப்படையும் போது, பிடிவாதத்தையும் நிர்தையையும் விட்டுவிட்டு. செய்யவேண்டிய பரிகாரங்களையெல்லாம் செய்துவிட்ட பின் அதிகாரமுள்ளவரால் மன்னிப்படையலாம். குற்ற வாளி பிடிவாதத்தை விட்டுவிட்டாஞ, சரியான பரிகாரஞ் செய்துவிட்டாஞ என்று தீர்ப்பது மன்னிப்பளிக்கும் அதி காரிக்குச் சொந்தமானது.

பாவசங்கீர்த்தனத்தில் பாவங்களுக்குப் பொறுத்த லடையுமுன், ஞானசிட்சைகளுக்கு மன்னிப்புப்பெறவேண் டும். அப்படி மன்னிப்படையுமுன், தன் குற்றத்தையும் பிடிவாதத்தையும் விட்டுவிடவேண்டும், செய்யவேண்டிய பரிகாரமெல்லாம் செய்து தீர்க்கவேண்டியது ; அந்த ஞான சிட்சையை மன்னிக்கிறவரிடம் எல்லாச் சங்கதியையும் சொல்லுவதவசியம். மன்னிக்க அதிகாரமுடையவரால்மாத் திரம் மன்னிப்படையலாம் ; எல்லா ஞான சிட்சையையும் மன்னிக்க எல்லாக் குருவானவருக்கும் அதிகாரமில்லை அதிகாரமில்லாமல் ஞானசிட்சையை மன்னிக்கும் குருவான வர் கனத்த குற்றத்திற்காளாகிருர் ; அவர் கொடுக்கும் பொ றுத்தலும் பொறுத்தலாகாது. மேலே (4-ம் அதிகாரத்

தில்) கூறிய தீர்க்கப்பட்ட திருச்சபைப் பிரஷ்டங்களில் சிலவற்றை மன்னிக்க பரிசுத்த பாப்பானவருக்குத்தான் அதிக விசேஷமாய்ச் சொந்தம். வேறு சிலவற்றை மன்னிக்க அவருக்குத்தான் விசேஷவிதமாய்ச் சொந்தம். வேறு சிலவற்றை மேற்றிராணியார்மாத்திரம் மன்னிக்கலாம். **ஆனால் நியமிக்கப்பட்ட சிட்சைக்கு** (Censuræ ab homine) சிட்சை விதித்த அதிகாரியும், அவருக்குப் பெரியவரும் அவர் பதவிக்கு அவருக்குப் பின்னால் வருகிறவரும், அவர் யாருக்கு உத்தரவு அளிப்பாரோ அவருந்தான் மன்னிப்பளிக்கலாம். உதாரணமாக: நவீனபுரி மேற்றிராணியார் ஓர் விசேஷ சிட்சையை ஒருவனுக்கு விதித்தால், அச்சிட்சையை பாப்பானவரும், சிட்சையிட்ட நவீனபுரி மேற்றிராணியாரும், அம்மேற்றிராணியார் யாருக்கு அதிகாரம் அளிப்பாரோ அவரும், அம்மேற்றிராணியாருக்குப்பின் நவீனபுரி மேற்றிராணியாராய் வருகிறவருந்தான் மன்னிப்புக் கொடுக்கலாம். **ஆனால் நியமிக்கப்பட்ட ஞானசிட்சை**யென்றால் என்ன? தீர்க்கப்பட்ட ஞானசிட்சைகளுக்குள்ளே, ஒன்றை விசேஷித்து நியாயத் தீர்ப்பைப் போல் விதிக்கும் சிட்சையும், சட்டத்தில் ஒன்றுமே கூறாமலிருக்கும்போது அதிகாரமுள்ளவர்தானே விதிக்கும் சிட்சையும், 5-ம் அதிகாரத்தில் கூறப்பட்டவைகளிலிருந்து நியமிக்கப்படும் தீர்க்கும் ஞான சிட்சைகளும் ஆள் நியமிக்கும் சிட்சையாம்.

- ஞானசிட்சைக்காளான ஒருவன் மரணத்தறுவாயிலிருக்கும்போது செய்யவேண்டியவைகளைச் செய்தால் எக்குருவானவரும் எச்சிட்சையையும் மன்னிக்கலாம். ஆகிலும் அவன் ஞானசிட்சைக்கு மன்னிப்புப் பெறுமுன் ஞான சிட்சை விதித்தவரோ அல்லது அச்சிட்சையை மன்னிக்க அதிகாரமுள்ளவரோ சொல்வதையெல்லாம் செய்வதாகவும்

அப்படி அதிகாரமுள்ளவரிடம் ஓர் மாதத்திற்குள் போய் தன் சிட்சையை வெளியிட்டு, மன்னிப்படைவதாகவும் உறுதிமொழி கொடுக்கவேண்டும். நோயாளி பலவீனத்தால் அதிகாரமுள்ளவரிடம் போகமுடியாவிடில்; மன்னிப்பளிக்க அதிகாரமின்றியே அவசரத்நிமித்தம் மன்னிப்பளிக்கும் குருவானவரே, சிட்சையை விதித்தவருக்கோ அதை மன்னிக்கக்கூடியவருக்கோ எல்லாமறிவித்து உத்தரவுபெறலாம். இப்படி அதிகாரமில்லாத குருவால் மன்னிப்படைந்தவன் ஓர் மாதத்திற்குள் தானேயாவது பாவப்பொறுத்தல் கொடுத்த குருவானவர் வழியாவது சிட்சையை மன்னிக்க அதிகாரமுள்ளவரிடம் போகாவிடில் மறுபடியும் அவன் அச்சிட்சைக்காளானவனே (2252, 2254 தி. ச.).

ஒருவன் பல ஞான சிட்சைகளுக்காளாயிருக்கும்போது சிலசமயங்களில் ஓர் ஞான சிட்சைக்கு மன்னிப்படைந்து, இன்னோர் ஞான சிட்சைக்கு மன்னிப்படையாமலிருக்கலாம். பல கிரிகைகளினால் பல குற்றங்களைச் செய்து பல ஞான சிட்சைகளுக்காளானவனும்; ஒரே கிரிகையினால் பல கற்பனைக்கு விரோதமாய்ப் பல குற்றங்களைக் கட்டிக்கொண்டு பல ஞான சிட்சைகளுக்காளானவனும்; ஒரே குற்றத்தைப் பலதரஞ்செய்து, ஒரே ஞான சிட்சைக்குபலதரம் ஆளானவனும்; ஞான சிட்சைகளிலிருந்து மன்னிப்படையுமுன் பெருத்த பரிகாரஞ்செய்யவேண்டும்.

ஞான சிட்சைகளை யார் மன்னிக்கக்கூடும், அப்படி மன்னிப்படைய என்னசெய்யவேண்டும் என்றும் எல்லாமறிவதற்கு கிறீஸ்துவர்கள் மேற்றிராணியாராண்டவரையாவது நன்றாய்ப் படித்த குருவானவரையாவது கேட்கக்கடவார்கள்.

8-ம் அதிகாரம்.

## அபராத தண்டனைகள்.

(De pænis vindicativis)

அபராத தண்டனைகள் குற்றத்திற்குப் பரிகாரமாகவும் ஈடாகவும் நியமிக்கப்படுகின்றன. ஞானசிட்சைகளைப் போல் இவைகளுடைய முதற்கருத்து குற்றவாளியின் சீர்திருத்தமன்று; சட்டத்தின் பாதுகாப்பேயாம்; ஆதலால் குற்றவாளி தன் குற்றத்தைவிட்டுவிட்டாலும் தண்டிக்கப்படலாம். இவ்வபராத தண்டனைகளிலிருந்து விடுதலையாகும் சாதாரண வழி, விதிக்கப்பட்ட தண்டனைகளை செய்து தீர்த்தலாம். கீழ்க்குறிக்கப்பட்டவைகள் அபராத தண்டனைகளில் சில: (2291 தி. ச.)

1. இடநிஷேதம், ஆள் நிஷேதம்.

2. குறிக்கப்பட்ட கோவிலுக்குள்ளாவது, கோவில்களுக்குள்ளாவது பிரவேசிக்கக்கூடாது என்ற தள்ளுபடி.

3. மேற்றிராசன நகரை மாற்றல், அதாவது ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மேற்றிராசனத்தை மாற்றிவிடல்.

4. பங்கை ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு மாற்றிவிடல்; உதாரணமாக, புதுநகர் பங்கை (புதுநகர் கிறீஸ்துவர்களைத் தண்டிக்க) இதுவரையில் புதுநகருக்கடியிலிருந்த மதுநகருக்கு மாற்றி, மதுநகருக்கடியில் புதுநகரை வைத்தல்.

5. பண அபராதம்.

6. திருச்சபை அடக்கம் கொடாதிருத்தல்; திருச்சபை அடக்கமென்றால், கோவிலுக்குப் பிரேதத்தைக் கொண்டுபோதல், சடங்குகளோடு மந்திரித்தல், வேண்டிக் கொள்ளல், மந்திரிக்கப்பட்ட கல்லறையில் வைத்தல் முதலியனவாம். யார்யாருக்கு திருச்சபையடக்கம் கொடுப்பதில்லையென்றால் :—

i. கத்தோலிக் மதத்தை பயிரங்கமாய் விட்டுவிட்டவர்கள்,

ii. பதிதர் பிரிவினைக்காரராய்ப் போனவர்கள்,

iii. இரகசியசபைகளில் சேர்ந்தவர்கள்,

iv. குறிக்கப்பட்டு திருச்சபை பிரஷ்டராக்கப்பட்டவர்கள், நிஷேதத்திற்காளானவர்கள்,

v. வேண்டுமென்று தற்கொலைசெய்துகொண்டவர்கள்,

vi. தங்கள் சடலத்தை எரிக்கும்படி கேட்டுக்கொண்டவர்கள்,

vii. பயிரங்கமான பாவிகள்,—முதலியவர்களுக்காம். (1240 தி. ச.).

மேற்சொன்ன சந்தர்ப்பங்களில் யாதொரு சந்தேகம் நேரிட்டால் மேற்றிராணியாராண்டவரிடத்தில் ஆலோசனை கேட்கவும்.

யார்யாருக்கு திருச்சபை அடக்கம் கொடுக்கத் திருச்சபை மறுத்துவிட்டதோ, அவர்களுக்குப் பூசை முதலியது செய்துவைக்கக்கூடாது.

குறிப்பு :—பாவப்பொறுத்தல் தேவதிரவிய அநுமானங்களைக் கொடுக்கமாட்டோம் என்பது, முன்சொன்னது போல் அநேக சமயங்களில் ஞானசிட்சையே; ஆகிலும் வேறு சில சமயங்களில் குருக்கள் இவைகளைத் தரமாட்டோமென்று சொல்லும்போது, அது அபாத்திரவான்களுக்குத் தேவதிரவிய அநுமானம் கொடுக்கக்கூடாதென்னும் சட்டமாம். சரியான மனஸ்தாபமில்லாதவர்களுக்கும், கிட்டின சுயாதீன பாவச்சமயத்தை விடமாட்டோம் என்கிறவர்களுக்கும் குருவானவர் பாவப்பொறுத்தல் கொடுக்கக்கூடாது. அதுபோலவே பயிரங்கமான பாவிகளுக்கும் தேவதிரவிய அநுமானங்களைக் குருவானவர் கொடுக்கக்கூடாது; இன்னும் பயிரங்கமான பாவியொருவன் மனந்திரும்பிவிட்டானென்று குருவானவருக்குமாத்திரந் தெரிந்திருந்தாலும் இச்சங்கதி ஜனங்களுக்குத் தெரியாவிடில், குருவானவர் பயிரங்கமாய் தேவதிரவிய அநுமானங்களை கொடுக்கலாகாது; இரகசியமாய் வேண்டுமானால் அச்சந்தர்ப்பத்தில் கொடுக்கலாம். குருவானவருக்குமாத்திரம் ஒருவன் பெரும் பாவியென்று தெரிந்தபோதிலும் அவன் பயிரங்கமான பாவியல்லாவிடில்; பயிரங்கமாய் அவன் தேவதிரவிய அநுமானங்களை கேட்கும்போது குருவானவர் அவனுக்கு அவைகளை நிறைவேற்றவேண்டும். ஆனால் அப்பேர்க்கொத்த பாவி இரகசியமாய் தேவதிரவிய அநுமானங்களைக் கேட்பானேயாகில் குருவானவருக்கு அவன் பெருந் துரோகியென்று நிட்சயமாய்த் தெரியுமேயாகில், தேவதிரவிய அநுமானங்களைக் கொடுக்கலாகாது.

சேசுவின் திரு நாமம் வாழ்த்தப்படக்கடவதாக!

# இரண்டாம் பாகம்.

---

# கத்தோலிக்க சத்திய திருச்சபை.*

# (DE ECCLESIA)

---

[ † இக்குறி போட்டவைகள் முதனூலினின்றெடுக்கப்பட்டனவன்று ]

## 1. மெய்யான மதமும் திருச்சபையும்.

மனிதனைச் சர்வேஸ்பரனோடு பிணிக்கும் ஞான சங்கிலியே மெய்யான மதம். திருச்சபை அம்மெய்யான மதத்தின் வெளியடையாளம். மெய்யான மதமும் திருச்சபையும் உயிரும் உடலும் என்னலாம்; சரீரத்துக்கு ஆத்துமம் எப்படி பிரதானமானதோ அப்படியே மெய்யான மதத்துக்கு திருச்சபையாம். மெய்யான வேதம் மெய்யான சர்வேஸ்பரனை அறிந்து சிநேகித்து சேவிப்பதாம்; திருச்சபையானது இம்மெய்யான மதத்தை அறிந்து அநுசரிக்கும் விசுவாசிகளின் கூட்டம், சபை. எப்படி நம்முடைய உடலையும் உயிரையும் சர்வேஸ்பரன்தான் உண்டாக்கினரோ அப்படியே மெய்யான வேதத்தையும் திருச்சபையையும் உண்டாக்கினதும் சர்வேஸ்பரன்தான். மெய்யான வேதமானது கண்ணுக்கெட்டாதது, சர்வேஸ்பரனுக்கடுத்த சத்தியத்தையும் பரிசுத்ததனத்தையும், ஆத்துமத்தின் ஜீவியத்தையும் கொண்டுள்ளது; திருச்சபையோ வெளியரங்கமானது, கண்ணுக்கெட்டியது; ஒருவருக்குமேல் ஒருவ

---

*இது அநேகமாய் தெ. செகூர் ஆண்டவர் எழுதிய துண்டுப் பிரசுரத்தின் சாராம்சம்.

ரான அதிகாரிகளேயும், சத்திய போதனையையும், தேவத் திரவிய அநுமானங்களேயும் திருச்சடங்குகளேயும் பணிவிடைகளேயும் உடையது. இவ்விரண்டும் சேர்ந்ததுதான் கத்தோலிக் சத்திய மதம். ஜீவிக்கவேண்டுமேயாகில் எப்படி உயிரையும் உடலேயும் பிரிக்கமுடியாதோ அப்படியே மெய்யான மதத்தையும் திருச்சபையையும் ஒன்றைவிட்டு ஒன்றைப்பிரிக்கமுடியாது. பதிதர் இவையிரண்டையும் பிரிக்கத் தேடினுர்கள், உயிரற்ருர்கள், விசுவாசத்தை இழந்தார்கள், கத்தோலிக் மதத்தை விட்டுப் பிரிந்தார்கள்.

* * * *

## 2. திருச்சபை வெளியரங்கமுமானதே.

திருச்சபை முழுவதுமே உள்ளரங்கமானதல்ல; கண்ணுக்கெட்டியதே, இவ்வுலோகத்துக்கடுத்ததே. திருச்சபையானது மெய்யான வேதத்தையறிந்து அநுசரிக்கும் இவ்வுலகத்திலுள்ள மனிதர்களின் கூட்டமாம். இம்மனிதர்கள் எப்பேர்க்கொத்தவர்களோ அப்பேர்க்கொத்ததே திருச்சபையும். மனிதர்கள் ஆத்துமமும் சரீரமுமுள்ளவர்கள்; உள்ளரங்கமும் வெளியரங்கமும் சேர்ந்தவர்கள். அதுபோலவே திருச்சபை சர்வேஸ்பரனிடமிருந்து வருவதினுலும், சர்வேஸ்பரனேடு ஆத்துமங்களே சேர்த்துப் பிணிப்பதாலும், திருச்சபையும் உள்ளரங்கமானது, மோட்சத்துக்கடுத்தது, சர்வேஸ்பரனுல் உண்டாக்கப்பட்டது; ஆகிலும் நாம் சரீரத்தோடு சேர்ந்து சர்வேஸ்பரனுக்குப் பணிவிடை செய்யவேண்டியதால், திருச்சபை கண்ணுக்கெட்டியதே, உலகிலுள்ளதே. ஆதலால்தான் திருச்சபையின் போதனைகள் சர்வேஸ்பரன் கற்பித்த சத்தியங்களானபோதிலும், அப்போதனையை மனிதர்களாகிய பரிசுத்த பாப்பானவருக்கும் மேற்றிராணிமார்களுக்கும் சேசுநாதர்சுவாமி ஒப்புவித்தார்;

சேசுநாதருடைய தெய்வீக குருத்துவமான திருச்சபையின் குருத்துவம், மனிதர்களிலிருந்து எடுக்கப்பட்ட குருக்களால் நடத்தப்பெறுகிறது; பார்வைக் கெட்டாத தேவ இஷ்டப்பிரசாதம், கண்ணுக்கெட்டிய தேவதிரவிய அநுமானங்களால் கொடுக்கப்படுகிறது. சர்வேஸ்பரனுக்குச் செலுத்தும் வணக்கத்தின் கதி ஐம்புலன்களுக் கெட்டாததாயிருந்தாலும், அவ்வாராதனை ஐம்புலன்களுக்கெட்டிய சடங்கு வழிப்பாடுகளால் காட்டப்படுகிறது. திருச்சபை கண்ணுக்கெட்டாததாய் முழுவதுமே உள்ளரங்கமாயிருக்கவேண்டுமென்கிறவர்கள் திருச்சபை எப்பேர்க்கொத்ததென்று இன்னும் அறியவில்லையோ? இல்லை இல்லை. அவர்கள் இன்னதென்று சரியாய் அறிகிறார்கள்; திருச்சபையில் கண்ணுக்கெட்டியதெல்லாவற்றையும் விட்டுவிட்டால், தாங்கள் மனம்போல அநுபவிக்கும் சந்தோஷத்துக்கு இடைஞ்சலாய் நிற்கும் பத்துக் கற்பனையையும் தள்ளிவிடலாமென்று யோசிக்கின்றார்கள். திருச்சபை முழுவதுமே உள்ளரங்கமாயிருந்தால் அதை யார் கண்டது, அது யாரைக் கட்டுப்படுத்தக்கூடும்? மனம்போலத் திரியலாமல்லவா? இது தான் இக்கள்ள ஞானிகளின் நோக்கம்.

*  *  *  *

## 3. ஒரே திருச்சபைதான் உண்டு.

ஒரே சேசுநாதர் சுவாமிதான் உண்டு, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம். அதினால் மெய்யான கிறீஸ்துவாகிய மெய்யான கடவுளை அறிந்து சிநேகித்து சேவிக்கும் சபையாகிய திருச்சபையும் ஒன்றே. ஆதலால்தான் அப்போஸ்தலர்கள் சொல்லிக்கொடுத்த விசுவாச மந்திரத்தில் பொதுவாயிருக்கிற அர்ச்சியசிஷ்ட சபையையும் விசுவசிக்கிறேன் என்று சொல்லுகிறோமேயொழிய சபைகளையும் என்று சொல்வதில்லை. இரண்டு திருச்சபை இருக்கின்றன

வென்று வைத்துக்கொள்வோம். இரண்டும் மெய்யான வேதத்தைச் சொல்லிக்கொடுக்கின்றனவா இல்லையா? இரண்டும் மெய்யான வேதத்தைச் சொல்லிக்கொடுத்தால், இவை இரண்டும், பேரில்தான் வித்தியாசம், மெய்யாகவே ஒன்றுதான். இவை இரண்டில் ஒன்று பொய்யான வேதத்தைச் சொல்லிக்கொடுத்தால், அது சத்தியராகிய சேசுநாதர் சுவாமி சொல்லிக்கொடுத்து ஏற்படுத்திய திருச்சபையல்ல. சேசுநாதர் ஸ்தாபித்த திருச்சபை ஒன்றுதான்.

* * * *

## 4. கத்தோலிக் திருச்சபை தேய்வீகமானது.

கத்தோலிக் சத்திய திருச்சபைதான் சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த சபை: கத்தோலிக் சத்திய திருச்சபை ஒன்றுதான் சேசுநாதர்சுவாமி நாள்முதல் அப்போஸ்தலர் காலந்தொடங்கி தொடர்ச்சியாய் வந்திருக்கிறது; அதினுல்தான் அதற்கு அப்போஸ்தோலிக் சபை என்று மற்ற பாஷைகளில் சாதாரணமாய் வழங்கி வருகிறது. முதல் பாப்பானவராய் நியமிக்கப்பட்ட அர்ச். இராயப்பர் உரோமாபுரியில் தங்கியிருந்தபடியாலும், அவருக்குப்பின் வந்த பாப்புமார்களெல்லாம் உரோமாபுரியில் தங்கி வந்தபடியாலும், அது உரோமான் சபை என்றும் உரோமன் கத்தோலிக்சபை என்றும் அழைக்கப்படுகின்றது. ஆதிமுதல் பாப்பானவர் உரோமாபுரியின் மேற்றிராணியாரே; அவர் திருச்சபைக்குத் தலைவரானபடியால் திருச்சபை முழுவதும் உரோமன் என்று பேர் வைத்துக்கொள்ளுதல் தனக்கு மகிமையென்று பாராட்டிவருகிறது. திருச்சபையை விட்டுப். பிரிந்துபோன சபைகளெல்லாம் கள்ளச் சபைகள்; திருச்சபையை விட்டு என்று அவர்கள் பிரிந்தார்களோ, அன்றே அவர்கள் சேசுநாதரையும் விட்டு அகன்றூர்கள்,

விசுவாசத்தை இழந்தார்கள். இச்சபைகளெல்லாம் உண்டான நாளும் தேதியும் நமக்குத்தெரியும். காமாதுரனான எட்டாம் ஹென்றியும் அவன் சோரபுத்திரியான எலிசபெத்தும் ஆங்ளிக்கன் சபையை 16-ம் நூற்றாண்டில் உண்டாக்கினார்கள். சந்நியாச சபையில் இருப்பது பாரமென்று அதை விட்டு ஓடிப்போன அக்கிரமத்துறவியான லூத்தேர் ஐரோப்பாவில் பதிதமதத்தை 16-ம் நூற்றாண்டில் ஸ்தாபித்தான். திருச்சபையானது ஒன்றுக்கும் அசையாமல் ஒரே விசுவாசத்தோடும் ஒரே ஏற்பாட்டோடும், எண்ணிக்கையில்லா அர்ச்சியசிஷ்டவர்களைப் பெற்றெடுத்துக்கொண்டு புதுமைகளைச் செய்துகொண்டு உலகத்தின் எப்பக்கமும் பிரவேசித்து வளர்ந்தோங்கி வருகின்றது.

* * * *

## ‡ 5. திருச்சபையும் இரட்சண்ணியமும்.

திருச்சபைக்குப் புறம்பே இரட்சண்ணியமுண்டா? இரட்சண்ணியமடைவதற்கு உள்ளரங்கமான ஆசையாலாவது திருச்சபையில் சேர்ந்திருக்க வேண்டும். உள்ளரங்கமான ஆசையால் சேர்ந்திருப்பதென்றால் என்ன? வெளியரங்கமாய்த் திருச்சபையில் சேராத பயபக்தியுள்ள மனிதர்கள் இருப்பார்களேயாகில்; அவர்கள் மெய்யாகவே உண்மையை நேசித்து, தங்கள் மனச்சாட்சி சொல்லுவதுபோல தின்மையை விலக்கி, நன்மையைச் செய்வார்களேயாகில்; திருச்சபை மெய்யான வேதமென்று அறிந்தக்ஷணமே, தங்களுக்குவரும் இக்கட்டையும் இடைஞ்சலையும் கவனியாமல், அதில் சேரத்தயாராயிருக்கத் தைரியமாயிருப்பார்களேயாகில், இத்தகையோர் திருச்சபையில் உள்ளரங்கமான ஆசையால் சேர்ந்திருக்கிறார்கள்; இவர்களை சர்வேஸ்பரன் எவ்விதமாவது காப்பாற்றுவார். இந்நல்லமனதும் கிடையா

விடில் திருச்சபையில் வெளியரங்கமாய்ச் சேராதவர்கள் இரட்சண்ணியமடையார்கள். ஆதலால் திருச்சபையிலிருந்து வேத சத்தியங்களைப் படித்தபின், வேண்டுமென்று வேறு மதத்துக்குப் போகிறவர்களுக்கு இரட்சண்ணியமில்லை. கத்தோலிக் மதத்தைச் சேராத நல்ல மனதுள்ளவர்கள் எப்போது தங்கள் மதம் பொய்யென்றாவது, கத்தோலிக் மதம் உண்மையாயிருக்கக் கூடுமென்றாவது சந்தேகிக்கிறார்களோ, அப்போது அவர்கள் அதை ஆராய்ந்து பார்க்கவேண்டும், படிக்கவேண்டும், சந்தேகத்தை நிவர்த்தி செய்யவேண்டும்; இச்சந்தேகம் உதித்த பின்னும் அவர்கள் சும்மாயிருப்பார்களேயாகில் அவர்களுக்கு நல்லமனதில்லை. திருச்சபை தான் மெய்யான மதமென்று நிச்சயமாயறிந்த கத்தோலிக்கரல்லாதார், திருச்சபையில் சேராவிடில், அவர்களுக்கு எவ்வளவுதான் நல்ல மனதிருந்தபோதிலும் இரட்சண்ணியமடையார்கள்.

* * * *

## 6. பரிசுத்த பாப்பானவரின்றி திருச்சபையில்லை.

திருச்சபையை விட்டு அர்ச். பாப்பானவரைப் பிரிக்கவே முடியாது: தலையை விட்டு உடல் பிரிந்து ஜீவிக்க முடியுமா? திருச்சபையானது உலகில் ஜீவித்து பரவவேண்டுமென்று விரும்பிய சேசுநாதர் தனக்குப்பதிலாய் பிரத்தியக்ஷ தலைவராக பரிசுத்த பாப்பானவரையும், உடலாக மேற்றிராணிமார் குருக்கள் விசுவாசிகளையும் உட்படுத்தி, இவர்களிருதிறத்தாரையும் ஐக்கியப்படுத்திவிட்டுப்போனார். இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே ஒரு சரீரம். உலகிலிருக்கும் சர்வேஸ்பரனுடைய குடும்பத்திற்கு பரிசுத்த பாப்பானவர்தான் தந்தை; அதினால்தான் அவரைப் பாப்பானவர் (= அப்பா, தந்தை) என்கிறோம். அவரைப் பரிசுத்த

பாப்பானவர் என்று ஏன் அழைக்கிறோமென்றால், அவருடைய தந்தைத்துவம் பரிசுத்தமானது, சர்வேஸ்பரனால் ஏற்படுத்தப்பட்டது. திருச்சபையின் பொதுச்சங்கங்களுடைய அதிகாரம் பாப்பானவரிடமிருந்துதான் வருகின்றது; பாப்பானவரில்லாவிடில் பொதுச் சங்கங்களில்லை. பொதுச் சங்கங்களை அவர்தான் சேர்க்கவேண்டியவர், கலைக்கவேண்டியவர். அவர் அநுமதி தந்தால்தான் அச்சங்கங்களின் தீர்மானங்களுக்கு மதிப்பும் உயிருமுண்டு. பாப்பானவர்மேல் நீதி செலுத்துகிறவர்கள் ஒருவருமில்லை; அவர் யாருக்கும் கீழ்ப்பட்டவரல்லர், யாவரும் அவருக்குக் கீழ்ப்பட்டவர்கள்; ஏனெனில் சங்கங்களின் தலைவரும், திருச்சபையின் தலைவரும் அவரே. பாப்பானவரும் திருச்சபையும் ஒன்றுதான் என்று அர்ச். பிரான்சீஸ்கு சலேசியார் சொல்லியிருக்கிறார். பாப்பானவரைவிட்டுப் பிரிகிறவன், திருச்சபையை விட்டுப்பிரிகிறான். இது விசுவாசப் பிரமாணச் சத்தியங்களில் ஒன்று. அர்ச். பாப்பானவரை வேண்டாமென்கிறவன் திருச்சபையை வேண்டாமென்கிறான்; திருச்சபையை விட்டுப் பிரிகிறவன், அதை நிந்திக்கிறவன், அதைக் கண்டனம் செய்கிறவன், சேசுநாதரை விட்டுப் பிரிகிறான், சர்வேஸ்பரனையே கண்டனஞ்செய்கிறான். "உங்களை அவமதிக்கிறவர்கள் என்னை அவமதிக்கிறார்கள்." திருச்சபையை அழிக்கவேண்டுமென்று எண்ணுகிறவர்கள்தான், பரிசுத்த பாப்பானவருக்கு விரோதமாய் எழும்புவார்கள். திருச்சபையை அழிக்கத் தேடுகிறவர்கள், ஏன் இப்படிச் செய்கிறார்களென்றால், சிலுவையில் நமக்காக அறையுண்ட சேசுவைத் தள்ளிவிடுவதற்காகவே; இவ்வேலையைச் செய்யத்தான், சாத்தான் இத்துரோகிகளை சதா தூண்டிவிட்டுக்கொண்டேயிருக்கிறது.

*　　*　　*　　*

## 7. திருச்சபையின் அமைப்பு.

உலகில் ஓர் சேனையின் அமைப்பு எப்பேர்ப்பட்டதோ, ஓர் இராஜாங்கத்தின் ஏற்பாடு எப்பேர்க்கொத்ததோ; அதேபோல திருச்சபையின் ஏற்பாடும் அமைப்புமாம். சேசுநாதர்சுவாமிக்குப் பதிலாயிருக்கும் திருச்சபையின் தலைவர், சேசுநாதர் பேரால் யாவருக்கும் கட்டளையிடுகிறார்; யாவரும் அவருக்குக் கீழ்ப்படியவேண்டியவர்கள்; அவருடைய கட்டளைகளில் சர்வேசுரன் அவருக்கு உதவியாய் நிற்கிறார். திருச்சபை முழுவதுக்குமே பரிசுத்த பாப்பானவர்தான் மேற்றிராணியார், மேய்ப்பர், இராயர்; மேற்றிராணிமார்களுக்கெல்லாம் மேற்றிராணியார் அவரே; திருச்சபை முழுவதும் அவர் மேலும் அவர் அதிகாரத்தின் மேலும் சாய்ந்துகொண்டிருக்கிறது; நமது ஆண்டவர் இவ்வாறு ஏற்படுத்தியிருக்கின்றார்.

அர்ச். பாப்பானவருக்குக் கீழும், அவரைச் சுற்றியும் மேற்றிராணிமார்கள் இருக்கிறார்கள்; பாப்பானவரோடு சேர்ந்து அவர்கள் உலகிலுள்ள மேற்றிராசனங்களை ஆளுகிறார்கள். பல மேற்றிராசனங்கள் ஒன்று சேர்ந்து ஓர் மாகாணமாகிறது; மாகாணத்தின் தலைவர் அதிமேற்றிராணியார்.

ஒவ்வொரு மேற்றிராணியாரும் தன் மேற்றிராசனத்தைப் பங்குகளாகப் பிரித்து, அவைகளுக்குத் தலைவராக பங்குசுவாமியாரையும் உதவிப்பங்குசுவாமியாரையும் நியமிக்கிறார். இதற்குப் பின்படியில் விசுவாசிகளிருக்கிறார்கள். இவ்வகையாய்த் திருச்சபையில் ஒற்றுமை ஏற்படுகிறது.

எப்படி ஓர் அரசனிடம் மந்திராலோசனை இருக்கின்றதோ, அதுபோல பாப்பானவரைச் சுற்றிக் கர்தினால்மார்களிருக்கிறார்கள். அவர் வேறு மேற்றிராணிமார்களையும் கூப்பிட்டு, தன்னருகில் வெவ்வேறு சங்கங்களை உண்டாக்கி

வெவ்வேறு காரியங்களை விசாரிக்க அவர்களை நியமிக்கலாம். இவைகளுக்கு உரோமன் சங்கங்களென்று பெயர்; இவைகளினுடைய அதிகாரம் பாப்பானவருடைய அதிகாரமே.

* * * *

## † 8. சந்நியாச சபைகள்.

சந்நியாச சபைகள் அர்ச். பாப்பானவருடைய இராணுவ சேனைகளைப் போலிருக்கிறார்கள்; இராஜாங்கத்தைக் காப்பதற்கு அவ்விராயருக்குதவி புரிகிறார்கள். பிறதேசத்தார்களுக்கும் உள்நாட்டுக் குழப்பக்காரர்களுக்கும் சேனைகள் மேல் வெகு பயம். இச்சேனைகளை முதல் முதல் தொலைத்துவிட்டால்தான் பிறகு வெகு சீக்கிரம் சுலபமாய் இராஜாங்கத்தைக் கைவசப்படுத்தலாம்; ஏனெனில் இச்சேனுவீரர் எப்போதும் ஜாக்கிறதையாயிருக்கின்றனர்; எல்லாவற்றையும் பார்க்கின்றனர். தூரத்தில் கொஞ்சம் அரவம் கேட்டாலே போதும், எச்சரிக்கையாய் எழுந்து நிற்கின்றனர். இத்தன்மையான வேலைகளைத் திருச்சபையில் சந்நியாச சபைகள் செய்து வருகின்றபடியால்தான், உலகத்தின் எப்பக்கத்திலும் உள்ள அவிசுவாசிகளுக்கும், வேத துரோகிகளுக்கும் சந்நியாச சபைகள்மேல் காட்டம், பகை. சந்நியாச சபைகளுக்கு திருச்சபை ஆட்சியில் யாதொரு பங்கில்லாவிடினும்; பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பதினுலும், ஆத்துமங்களை புண்ணியபாதையில் நடத்தி வருவதினுலும், பிரசங்கம் தியானம் கொடுப்பதினுலும், பதிதர் அஞ்ஞானிகளை மனந்திருப்புவதினுலும், இன்னும் இதர திருச்சபையின் பக்திக்கடுத்த அலுவல்களை நடத்திவருவதினுலும், திருச்சபை அதிகாரிகளுக்கு அதிக உதவிசெய்து வருகிறார்கள். இக்காரணத்தினிமித்தந்தான் பக்திபற்றவர்கள் சந்நியாச சபைகளை விரோதித்து, அவர்கள்மேல் இல்லாத அபாண்டங்களையெல்லாம் சுமத்தி, அவர்களுக்கு விரோதமாய் சதி

மானமும் குழப்பமும் செய்து, அவர்களை விரோதித்து வரு கிறார்கள்; ஏனெனில் சந்நியாசிகள் தொலைந்தால் அவர்கள் பிரியம்போல் மற்றவர்களை ஆட்டிவைக்கலாம்.

* * * *

## 9. திருச்சபையின் இரு அங்கத்தினர்.

திருச்சபையில் படித்துக்கொடுக்கும் அங்கத்தினரும், படிக்கும் அங்கத்தினருமென்று இரு வகுப்பாருளர்: பரி சுத்த பாப்பானவரும் மேற்றிராணிமார்களும் சொல்லிக் கொடுக்கும் திருச்சபை; குருக்களுக்கும் இதில் கொஞ்சம் பங்குண்டு. மற்ற விசுவாசிகளெல்லாம் அவர்கள் பிரபுக்களா யிருந்தாலும் சரி, பிரஜாதிபதிகளாயிருந்தாலும் சரி, இரா ஜாதிபதிகளாயிருந்தாலும் சரி, படிக்கும் திருச்சபை. இவ் விரண்டு வகுப்பும் சர்வேசுரன் ஏற்படுத்தியவையாம். அதி காரத்தையும் போதனையையும் பற்றிப்பேசும்போது திருச் சபை யென்றால் சொல்லிக்கொடுக்கும் திருச்சபையாம். பரி சுத்த பாப்பானவருக்கும் மேற்றிராணிமார்களுக்குந்தான் கற்பிக்கவும், ஆளவும், நீதிசெலுத்தவும் வேண்டிய கடமை யையும் உரிமையையும் ஆண்டவர் கொடுத்திருக்கிறார். இவ் வதிகாரத்தினால் படிக்கும் திருச்சபைக்கு பலனும் பிரயோ ஜனமுமுண்டு, ஆனால் அவ்வதிகாரத்தில் பங்கில்லை. வேத சத்தியங்களைப் போதிப்பதில் திருச்சபையின் அதிகாரத் தின் பூரணமும் பரிசுத்த பாப்பானவருக்குரியது, அவருக் குச் சொந்தம். போதிப்பதில் பூரண வரமும், தீர்வையிடுவ தில் சர்வ அதிகாரமும் விதிவிலக்குகளை நியமிக்கும் பூரண சுதந்தரமும் பாப்பானவருக்கு மாத்திரம் உண்டு. அவரது தீர்வையிலிருந்து மறு விசாரணை (அப்பீல்) இல்லை.

ஒவ்வொரு மேற்றிராணியாரும் அதிகாரத்தோடு தன் மேற்றிராசனத்தில் வேதசத்தியங்களைப்போதிக்கிறார், தீர்க் கிறார், ஆளுகிறார், சட்டங்களை ஏற்படுத்துகிறார். ஆனால்

இவ்வதிகாரத்தின் பூரணம் அவருக்கில்லை. அவர் பரிசுத்த பாப்பானவருக்குக் கீழ்ப்பட்டவர்; மேற்றிராணியார் தீர்வையிலிருந்து பரிசுத்த பாப்பானவரிடம் மறு விசாரணைக்குப் போகலாம் (அப்பீல் செய்யலாம்). குருக்கள் மேற்றிராணிமார்களுக்கு உதவிபுரியவேண்டியவர்கள்; அவர்கள் விசுவாசத்துக்கடுத்தவைகளில் நீதிபதிகளல்ல, ஆகிலும் அவர்கள் சொல்லிக்கொடுக்கிறார்கள். குருக்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட படிப்பைப் பிறருக்குக் கொடுக்கிறார்கள். மூத்த குமாரனுக்கு பெற்றோர்கள் ஜீவனோடு இருக்கும்போது ஓர் குடும்பத்தில் என்ன நிலைமை உரியதோ அதே நிலைமைதான் சர்வேசுரனுடைய குடும்பமாகிய திருச்சபையில் குருக்களுக்கும் உரியது.

ஆதலால் திருச்சபை முழுவதும் தவறாத சபை: சேசுநாதர் உலகமுடியுமட்டும் திருச்சபையோடு இருப்பதாலும், இஸ்பிரீத்துசாந்துவானவர் உதவிபுரிவதாலும், சொல்லிக்கொடுக்கும் திருச்சபை தவறிப்போகமுடியாது; இப்படித் தவறாத வரமுள்ள சொல்லிக்கொடுக்கும் திருச்சபை போதிக்கும் சத்தியங்களை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தோடு காப்பாற்றுவதினால் படிக்கும் திருச்சபையும் தவறாது.

* * * *

## ‡10. (*a*) அர்ச். பாப்பானவரினதிகாரம்.

உலகத்திலுள்ள சகல கிறீஸ்துவர்களுக்கும், அவர்கள் இராயர்களானாலுஞ்சரி, பிரஜைகளானாலுஞ்சரி, மேற்றிராணிமார்களானாலுஞ் சரி, குருப்பிரசாதிகளானாலுஞ் சரி, யாவருக்கும் போதித்து, யாவரையும் ஆண்டு, யாவரையும் அர்ச்சிக்க பரிசுத்த பாப்பானவருக்குத்தான் சுதந்தரமும் அதிகாரமும் உண்டு. பொதுவில் உலகில் இருக்கிற சகலருக்குமே போதிக்கலாம், ஞானஸ்நானம் பெற்ற

சகலருக்குமே சட்டங்களை ஏற்படுத்தலாம். ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் எவ்வாறு நேரே மேற்றிராணியார் போதித்து ஆண்டுவருகிறுரோ, அவ்வாறே பரிசுத்த பாப்பானவரும் ஒவ்வொரு மேற்றிராசனத்திலும் மேற்றிராணியார் வழியாய்ப் போகாமலே, மேற்றிராசனத்திலுள்ள சகலருக்கும் போதிக்கலாம், சட்டங்களை ஏற்படுத்தலாம். மேற்றிராசனத்தில் தீர்வைக்கு வந்து நிற்கும் காரியங்களை, பிரியமாளுல் தானே தீர்க்க எடுத்துக்கொள்ளலாம்; அல்லது அவைகளைத் தீர்க்கும்படி தன் சங்கங்களுக்கு ஒப்புவிக்கலாம். மேற்றிராணிமார்களை நியமிக்கவும், ஓர் மேற்றிராசனத்தை விட்டு இன்னொரு மேற்றிராசனத்திற்கு அவர்களை மாற்றவும், மேற்றிராசனத்தை விட்டு அகற்றவும், மேற்றிராசனத்தின் எல்லைகளைக் குறிக்கவும், குறுக்கவும் சகல அதிகாரமும் அர்ச். பாப்பானவருக்குண்டு.

அர்ச். இராயப்பர் ஸ்தானத்திலிருந்து உலகிலுள்ள எல்லா கிறீஸ்தவர்களுடைய மேய்ப்பனைப்போல் அவர்கள் யாவருக்கும் போதிக்கவேண்டுமென்னும் கருத்தோடு விசுவாசத்துக்கும் நன்னடத்தைக்கும் அடுத்தவைகளைப் பற்றி யாதொரு சத்தியப் பிரமாணத்தைத் தீர்மானிக்கும்போது, அவர் தவருத வரமுள்ளவர்; அவர் தப்பிப்போகமாட்டார், அவர் போதிக்கும் காரியம் தப்பாமற் சத்தியமான காரியம். "மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன்: நீ இராயாய் (கல்லாய்) இருக்கிறுய், இந்த இராயின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன், நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது." (மத். 16. 18.) என்று சேசுநாதர் சுவாமி கொடுத்த வரம் இத்தவருத வரமே. மேற்சொன்ன விதம் அவர் தீர்மானிக்கும் வேதசத்திய பிரமாணத்தை முழுமனதோடு உண்மையென்று ஏற்றுக்கொள்ளவேண்டியது. இச்சத்தியங்களை விசுவசிக்க மாட்டேனென்று

சொல்வானேயாகில் அவன் கத்தோலிக்கனல்லன்; அவன் பதிதன். அநேக சமயங்களில் மேற்சொன்ன விதம் உலக முழுவதுக்கும் தவறுத வரத்தோடு சொல்லிக் கொடுக்க வேண்டுமென்னும் எண்ணமில்லாமலே நிருபங்களாலும் தன் சங்கங்களாலும் பரிசுத்த பாப்பானவர் போதிக்கலாம். அப்போது முதலாய் அவர் சொல்வதற்குக் கீழ்ப்படிந்து உடனே நடப்பதுமன்றி அவர் சொல்வதை மனதாலும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுவதவசியம்.

## ‡ 10. (b) மேற்றிராணியார்.

திருச்சபைச் சத்தியங்களைச் சொல்லிக்கொடுக்கிறவர் உரோமாபுரி மேற்றிராணியார் மாத்திரமன்று; "சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று சேசுநாதர்சுவாமி அர்ச். இராயப்பருக்குமாத்திரம் சொல்லவில்லை; சகல அப்போஸ்தலர்களுக்கும் சொன்னர்; கட்டவும் அவிழ்க்கவும் வேண்டிய அதிகாரத்தை அர்ச். இராயப்பருக்கு மாத்திரமல்ல பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும் சேசுநாதர் சுவாமி தந்தருளினர். சேசுநாதர்சுவாமி முதல் முதல் மனிதர்களை சேர்த்து ஓர் சபையை ஏற்படுத்தி, அவர்கள் தங்களுக்குள் யாரையாவது தாங்களே தங்கள் மேய்ப்பர்களாகத் தெரிந்துகொள்ள அவர்களுக்கு யாதொரு அதிகாரம் தரவில்லை. அப்போஸ்தலர்களும் அர்ச். இராயப்பரும் அவர்களுக்குப் பதிலாயிருக்கிற பாப்பானவரும் மேற்றிராணிமார்களும் ஜனங்களால் தெரிந்துகொள்ளப்படுகிறவர்களல்ல, சர்வேசுரனல் தெரிந்துகொள்ளப்படுகிறவர்கள். சர்வேசுரனே நேரே அப்போஸ்தலர்களுக்கு அதிகாரத்தை அளித்ததுபோல இப்போதும் பாப்பானவருக்கும் மேற்றிராணிமார்களுக்கும் நேரே சர்வேசுரனே அதிகாரத்தை அளிக்கிறர். மேற்றிராணிமார்கள் பாப்பானவரிடமிருந்து

தங்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதில்லை ; சர்வேசுரனிடமிருந்தே தங்கள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

உலகிலிருக்கும் மேற்றிராணிமார்கள் எல்லோருமாவது அல்லது ஏறக்குறைய யாவருமாவது திருச்சபைப் பொதுச் சங்கமாகக் கூடி விசுவாசத்தையும் நன்னடக்கையையும்பற்றி தீர்மானிக்கும்போது அவர்களுக்குத் தவறாத வரம் இருக்கின்றது. அதேபோல மேற்றிராணிமார்கள் உலகத்தில் நாலாபக்கமும் பரவியிருக்கும்போது ; ஏறக்குறைய எல்லோரும் ஒரே காரியத்தைச் சொல்லிக்கொடுக்கும்போது ; அவர்கள் அப்படிப் போதித்துக்கொண்டு வருவதும் தவறாமல் சத்தியமே.

ஓர் மேற்றிராணியாருக்குத் தன் மேற்றிரர்சனத்தில் என்ன அதிகாரம் உண்டு? அவர் ஒருவரே அம்மேற்றிராசனத்தில் விசுவாசத்திற்கும் நன்னடக்கைக்கும் அடுத்த காரியங்களைச் சொல்லிக்கொடுக்கக்கூடிய சரியான போதகர் "போய்ச் சுவிசேஷத்தைச் சொல்லிக்கொடுங்கள்" என்றது மேற்றிராணிமாருக்குத்தான் செல்லும். அம்மேற்றிராசனத்தில் அவரைவிடக் கெட்டிக்காரரும் புத்திசாலிகளும் கல்விமான்களுமான குருக்களும் சந்நியாசிகளும் சாஸ்திரிகளும் இருக்கலாம். ஆனால் அவர்களல்ல, மேற்றிராணியார்தான் சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட பகிரங்க போதகர். மற்றவர்கள் எல்லோரும், அவர் அவர்களுக்கு எவ்வளவுக்கு உத்திரவுகொடுப்பாரோ அவ்வளவுக்கு பகிரங்கமாய்ச்சொல்லிக்கொடுக்கலாம். மேற்றிராணிமார்கள் பாப்பானவரோடு ஒன்றித்து எதைச்சொல்லிக்கொடுக்கலாமென்று சொல்லுகிறார்களோ அதைத் தான் அக்குருக்களும் சந்நியாசிகளும் சொல்லிக்கொடுக்கலாம். மேற்றிராணியாரோ தானே சர்வேசுரன் தனக்குக் கொடுத்த அதிகாரத்தைக்கொண்டு,

149405

விசுவாசத்துக்கும் நன்னடக்கைக்கும் அடுத்த சத்தியங்களைச் சொல்லிக்கொடுக்கலாம், அச்சத்தியங்களைப்பற்றித் தீர்மானிக்கலாம்; மேற்றிராசனத்திலுள்ள [illegible] அவர் சொல்லிக்கொடுப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்; அதைத் தள்ளிவிடக்கூடாது; சாதாரணமாய் அவர்கள் அதை புத்தியாலும் உண்மையென்று ஏற்றுக்கொள்ளுதலவசியம். மேற்றிராணிமார்கள் தனித்தனியே சொல்லிக் கொடுக்கும்போது அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித் தனியேதவறாத வரமில்லையென்பது மெய்தான். ஆகிலும் உலகத்தில் சாதாரண உபாத்திமார்கள் சொல்லிக்கொடுப் பதை யாவரும் ஏற்றுக்கொள்ளும்போது, சர்வேசுரனால் நியமிக்கப்பட்ட போதகர் சொல்லிக்கொடுக்கும்போது அவர்கள் போதிப்பதை ஏற்றுக்கொள்ளாதவர்களைப்பற்றி என்ன சொல்லலாம்?

மேற்றிராணியார் ஓர் சத்தியத்தைச் சொல்லிக்கொடுக் கும்போது; அச்சத்தியத்தைப் போதிக்க அவருக்கதிகார முண்டா, அவர் போதிக்கும் சத்தியம் விசுவாசம் நன்னடக் கைக்கு அடுத்ததா, அல்லது முழுவதும் இலௌகீக காரியத் தைச் சேர்ந்ததா என்று சந்தேகம் வரும்போது என்ன செய்யலாகும்? வேண்டுமானால் பாப்பானவருக் கெழுதிக் கேட்டுக்கொள்ளலாம்; ஆகிலும் பதில் வருமட்டும் மேற்றி ராணியாருக்கே கீழ்ப்படிய வேண்டும்; மேற்றிராணியார் சொல்வது சரி என்று பதில்வந்தால், மறுபடியும் கீழ்ப்படிய வேண்டியதுதான். மேற்றிராணியார் போதகர் மாத்திர மன்று, (கவர்னர்) அதிபதி ஆளுவோர்; அதினால் தன் மேற்றிராசனத்திற்கு சட்டங்களை ஏற்படுத்தலாம். உதார ணமாக அவ்வப்பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும், வாசிக் கக்கூடாதென்கலாம்; சில உலகத்துக்கடுத்த சங்கங்களையும் சபைகளையும் கண்டனம் செய்யலாம்; வேதத்திற்கு வரும்

தின்மைகளை விலக்க மந்திராலோசனையில் அக்கட்சியாருக்கோ, இக்கட்சியாருக்கோ ஓட்டுக்கொடுங்களென்று சொல்லலாம். இப்படி அவர் சட்டம் விதிக்கும்போதும், மேற்றிராசனத்தைச் சேர்ந்த விசுவாசிகள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களே. இவ்விக்காரியங்களில் இவ்வூர் மேற்றிராணியார் தன் அதிகாரத்திற்குமேல் செய்திருப்பாரென்று சந்தேகம் நேரிட்டால், பாப்பானவருக்கு மறு விசாரணைக்கும் போகலாம் (அப்பீல்செய்துகொள்ளலாம்). ஆகிலும் பதில் வரும்வரை மேற்றிராணியார் செய்த தீர்மானத்துக்கு அடங்கி நடக்கவேண்டும்; அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். அம்மேற்றிராணியார் தன் அதிகாரத்தை சர்வேசுரனிடமிருந்து நேராய்ப்பெற்றுக்கொண்டார் என்பதை மறந்துபோகவொண்ணாது.

* * * *

## 11. கற்பிக்கும் அங்கத்தினரின் அதிகார வரம்பு.

வேத சத்தியங்கள் ஒன்றின்மேல் தானா பரிசுத்த பாப்பானவருக்கும் மேற்றிராணிமார்களுக்கும் அதிகாரம் உண்டு? இல்லை, இல்லை, வேதசத்தியங்கள், மெய்யான வேதத்தின் ஓர் அம்சம், ஓர் பாகம். புத்தியிருந்தால் மாத்திரம் மனிதனாவானா? புத்தி மனிதனிடத்திலிருக்கிற ஓர் காரியம். எல்லாச் சத்தியத்தைமாத்திரமல்ல எல்லா நீதியையும் எல்லா ஒழுங்கையும் எல்லாப்புண்ணியத்தையும் மனிதர்களுக்குப் போதித்து அவைகளை அநுசரிக்கும்படி அவர்களை வற்புறுத்தஆண்டவர் திருச்சபையின் மேய்ப்பர்களுக்குக் கற்பித்திருக்கிறார். எல்லா மனிதர்களுக்கும் எல்லா ஜனங்களுக்கும் எல்லா ஆட்களுக்கும், சகல இராஜாக்களுக்கும் சகல பிரஜைகளுக்கும், சாஸ்திரிகளான யாவருக்கும் சாமானிய ஜனங்கள் யாவருக்கும் ஞானத்தாயாகவும், தவறாத எஜமானியாகவும் திருச்சபையை சர்வேசுரன் ஸ்தாபித்திருக்கிறார். "உல

கத்தின் ஒளி" யாயிருக்கும்படி சர்வேசுரன் திருச்சபையை ஏற்படுத்தினர். ஆதலால் மனிதருடைய நடத்தையையும் மனச்சாட்சியையும் சேர்ந்த எல்லாக் காரியங்கள் மேலும் அவைகள் எப்பேர்ப்பட்டனவாயிருந்தாலும், சர்வேசுர னிடமிருந்தே திருச்சபைக்கு அதிகாரம் இருக்கின்றது.

திருச்சபைக்கு இவைகள் யாவற்றின்மேலும் அதிகா ரம் இல்லையென்று சொல்லுகிறவன், சேசுநாதர்சுவாமிக்கு விரோதமாய்க் குழப்பஞ்செய்கிறுன். "உங்களுக்குச் செவி கொடுக்கிறவன், எனக்குச் செவிகொடுக்கிறுன், உங்களை நிந்திக்கிறவன் என்னை நிந்திக்கிறுன்" என்ற சேசுவின் வார்த்தையை மறந்துபோகவொண்ணுது. திருச்சபை தன் கடமைகளை நிறைவேற்றுவதில் தவறிப்போகாதபடி சர்வே சுரன் அதற்கு உதவிசெய்து வருகிறபடியால், சொல்லிக் கொடுக்கும் திருச்சபைதான் எவ்வெவைகளை ஒழுங்கு செய் யவும், தீர்க்கவும், நடத்தவும், கற்பிக்கவும், தனக்கு அதி காரமுண்டென்று தீர்மானிக்கக்கூடும்.

சிறு புத்தியுள்ளவர்கள் இதற்கு விரோதமாய்க் கத்த லாம் கரணம் போடலாம். சர்வேசுரன் ஏற்படுத்தியது மாறப்போகிறதில்லை. ஆதலால் கத்தோலிக்க விசுவாசமும் உணர்ச்சியும் கொஞ்சமுமின்றி பாப்பானவரும் மேற்றிரா ணிமார்களும் கிறீஸ்துவர்களல்லவென்றும்; மேற்றிராணி மார்கள் அவ்வக்காரியங்களை செய்யவேண்டுமென்றும், அவ் வக்காரியங்களைச் செய்யக்கூடாதென்றும், அவர்களுக்கு திருச்சபையின் நன்மை எதென்று தெரியவில்லையென்றும் பிதற்றுகிறவர்களைப்பற்றி என்ன சொல்லலாம்? இரண் டெழுத்து வாசிக்க எழுதத் தெரியாதவன் கம்ப இராமா யணத்தின்மேல் குற்றங் குறைகளை எடுத்துக் கூறுவதுபோ லவும், கிராமத் தலையாரியென்றுல் என்னவென்று அறியாத வீடு பெருக்கும் கிழவி இராஜாங்கத்தில் மந்திராலோசனைக்

காரியங்களின் மேல் தீர்ப்புச்சொல்ல துணிவதுபோலவு மாம். ஓ! எப்பேர்க்கொத்த பேதையர்கள் !!

*     *     *     *

## 12. திருச்சபையும் இலௌகீக அதிகாரங்களும்.

திருச்சபை இலௌகீக அதிகாரங்களை சட்டை செய்வதில்லையா ? திருச்சபையைப்போல் இலௌகீக அதி காரங்களைக் கனப்படுத்துகிறவர்கள் ஒருவருமில்லை. எல்லா உண்மையான அதிகாரத்தையும் திருச்சபை சங்கை செய் கிறது. தேசத்துக்கு விரோதமும் குழப்பமுமான போதனை களை நிலைநிறுத்தத்தேடுகிறவர்களை திருச்சபை எப்போதும் கண்டித்து வந்திருக்கிறது. நியாயமான இலௌகீக இரா ஜாங்கங்களுக்கு விரோதமாய் ஏற்படும் இரகசிய சபைகளை கண்டனம் செய்திருக்கின்றது. இதனுல்தான் தேசதுரோ கிகளும், இராஜ துரோகிகளும், குழப்பக்காரரும் திருச் சபையை விரோதிக்கிறுர்கள். எப்போதாவது சில அரசர் களின் தீர்மானங்களையும் தேச சட்டங்களையும் திருச்சபை கண்டனம் செய்தால், இதற்குக் காரணம் அது இராஜாங் கத்தை மதிக்காததினுலல்ல, உண்மையையும் நீதியையும் நன்னடத்தையையும் அது நிலைநிறுத்தத் தேடுவதே மேற் சொன்ன கண்டனத்திற்குக் காரணமாம். ஆள்கள் விஷய மாய் அது எப்படி நடந்துகொள்ளுகிறதோ அப்படியே சபைகள் விஷயமாய் அது நடந்துகொள்ளுகிறது. திருச் சபை இராஜாங்கங்களுக்கும் அரசர்களுக்கும், அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று காட்டி, தப்பிதம் செய்தால் நல்வழிக்கு வரவேண்டுமென்று தூண்டி, தன்னுலான பிர யாசையெல்லாம்பட்டு, சாந்தமான வழிபாடுகளால் நன் மையை நாட்டத் தேடியபின்னும் பிரயோஜனமில்லாவிடில் தான், திருச்சபை தன் தண்டனைகளை விதிக்கின்றது.

பாப்பானவரும் மேற்றிராணிமார்களும் இலௌகிக அதிகாரங்களை அசட்டை செய்கிறார்களென்றும் அவமதிக்கிறார்களென்றும் சொல்லுகிறவர்கள், பேயின் தாசராய் பேயின் வேலையைச்செய்கிறார்கள். பேய்தான் திருச்சபைக்கும் இராஜாங்கங்களுக்கும் மத்தியில் பகையை விளைவிக்கத் தேடுகின்றது. உலகத்துக்கடுத்த காரியங்களில் மட்டும் தலையிட்டுக்கொள்ளும் இலௌகீக அதிகாரம் மகிமையுடையது மதிப்புடையது. ஆனால் அரசாங்கங்கள் நீதிக்கும் நன்னடத்தைக்கும் அடுத்தவைகளாயிருக்கவேண்டும், சர்வேசுரனுக்கு பிரியப்பட்டனவாயிருக்கவேண்டும் ; மனிதர்களை இரட்சிக்கவும் அர்ச்சிக்கவும் சர்வேசுரனிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ள திருச்சபைக்கு, அக்கதியை நாடுவதில் சகல உதவியும் அவைகள் புரிதலவசியம். சேசுநாதர் பேரால் திருச்சபை அதிகாரிகள் அவைகளுக்கு ஞான வெளிச்சத்தைக் காட்டி, அவைகள் தப்பிதம் செய்யும் பட்சம் அவர்கள் அவைகளைத் திருத்தும்போது ; நீதியுள்ள இராஜாங்கங்கள் வருத்தப்படமாட்டா.

* * * *

## 13. திருச்சபை தேடும் சிலாக்கியம்.

திருச்சபை எப்பேர்க்கோத்த பேரையும் பிரக்கியாதையும் தேடுகின்றது ? நன்மை, நன்னடத்தை, நீதி, சர்வேசுரனுடைய ஊழியம் இவைகளை நாட்டும் பெருமையைத்தான் தேடுகிறது. வேறு பேரும் பிரக்கியாதியும் அது தேடுவதில்லை, அதற்கு அவசியமில்லை. மேற்கூறியவைகளை அது தேடுகிறது ; என்ன கஷ்டப்பட்டும், வேர்வையையும் இரத்தத்தையும் சிந்தி அவைகளை ஸ்தாபிக்கிறது. உலகத்தின் எப்பக்கமும் சேசுநாதர் அரசாளும்படியாக அது பிரயாசைப்படுகிறது. சேசுநாதர் சுவாமி மோட்சத்துக்குப்

போகுமுன் என்ன சொன்னார்? "வானத்திலும் பூமியிலும் சர்வ அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆதலால் போய் சகல ஜனங்களுக்கும் பிரசங்கித்து எனது கற்பனைகளைச் சொல்லிக்கொடுங்கள்" என்பதல்லவா? இவ்வதிகாரத்தைக்கொண்டுதான் திருச்சபை எங்கும் சென்று, சேசுவை அறியவும் சிநேகிக்கவும் சேவிக்கவும், சகலரும் இணங்க உழைக்கும்படி, வெகுவாய் பிரயாசைப்படுகின்றது. இவ்வலுவலை நடத்துவதில், திருச்சபை எதற்கும் அஞ்சுவதில்லை யாருக்கும் பயப்படுவதில்லை. "திருச்சபையின் அகங்காரம்" "சுவாமிமார்களின் பேராசை" "குருக்களும் சந்நியாசிகளும் தங்களுக்குச்சேராத காரியங்களிலெல்லாம் தலையிட்டுக்கொள்ளுகிறார்கள்" என்று மூடர்கள் என்னென்னமோ குற்றங்களைச்சாட்டலாம்; இதெல்லாவற்றையும் திருச்சபைக் கவனிப்பதில்லை. யார் என்ன சொன்னபோதிலும், திருச்சபை பின்னடையாமல், தன் வேலையைச் செய்தே தீரும், அதை நிந்திக்கிறவர்களே பிற்காலத்தில் ஆபத்து வரும்போது, அதன் காலைப்பிடிப்பார்கள்; திருச்சபையும் அவர்களுக்கு உதவிசெய்யும். திருச்சபை அவர்கள் சொல்லும் வண்ணம் எல்லாவற்றிலும் தலையிட்டுக்கொள்வதில்லை; சர்வேசுரன் விலக்கியிருப்பதை யாராவது செய்யத்தேடினால், அது எதிர்த்து நிற்கும்; திருச்சபை இவ்வுலகத்தில் எதைக் கண்டனம் செய்கிறதோ, சேசுநாதர் சுவாமி மோட்சத்திலிருந்தே அதைக்கண்டனம் செய்கிறார்.

* * * *

## ‡14. மேற்றிராணிமார்கள் இலௌகீக அதிகாரிகளன்று.

மேற்றிராணிமார்களும் குருக்களும் இலௌகீக அதிகாரிகளா? உலக இராஜாங்கத்திலுள்ள அதிகாரிகளில் ஒரு

வர்களா? மேற்றிராணிமார்களும் குருக்களும் இலௌகீக அதிகாரிகளன்று; ஆதலால் இலௌகீக அதிகாரிகள்மட்டில் கையாடும் வழிப்பாடுகளை அவர்கள்மட்டில் கையாடக் கூடாது. தங்கள் ஆளுகை விஷயத்தில் அவர்கள் இலௌகீக அதிகாரிகளுக்கு கணக்குக் கொடுக்கவேண்டியவர்களல்லர்; இலௌகீக அதிகாரிகள்முன் அவர்களுக்கு விரோதமாய் விண்ணப்பம் (அப்பீல்) செய்து பிரயோஜனமில்லை. சில தேசங்களில் அவர்களுக்கு இராஜாங்கங்கள் மாதமாதமோ வருஷாந்தரமோ பணம் கொடுத்துவந்தாலும், அவர்கள் தங்கள் அலுவலில் இலௌகீக அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டவர்களல்ல. மேற்றிராணிமார்களும் குருக்களும் சர்வேஸ்பரனுடைய பேரால் மாத்திரம் தங்கள் அலுவலை நடத்திவருகிறார்கள்; அவர்கள் அதிகாரம் சேசுநாதர் சுவாமியிடமிருந்து வருகிறது.

* * * *

## 15. மேற்றிராணிமார்களின் நியமகம்.

ஒருவர் மேற்றிராணியாராவது எப்படி? இதற்கு இரண்டு காரியங்தேவை. முதன்முதல் அர்ச். பாப்பானவர் ஓர் குருவானவரைத் தெரிந்துகொள்ளவேண்டும். புது மேற்றிராணியாரை நியமிக்கவும், மேற்றிராசனத்தின் எல்லைகளைக்குறிக்கவும், தான் தெரிந்துகொண்டு நியமித்த குருவானவருக்கு ஞான அரசாட்சி கொடுக்கவும், அர்ச். பாப்பானவருக்குத்தான் அதிகாரமுண்டு. ஞான அரசாட்சி யென்றால் ஆளவும், கற்பிக்கவும், தீர்க்கவும், கட்டவும், அவிழ்க்கவும் வேண்டிய பாத்தியதை. (அரசாட்சி பாத்தியதை வேறே, அதிகாரம் வேறே. ஓர் வக்கீல் பரீட்சையில் தேறினவுடனே, அவ்வேலை செய்ய அவன் அதிகாரம் உள்ளவன்; ஆனல் இராஜாங்கம் எச்சில்லாவுக்கு அவனை

நியமிக்குமோ எப்போது நியமிக்குமோ, அப்போதுதான் அச்சில்லாவில்தான் தன் வேலையைச்செய்ய அவன் பாத்தியதை உள்ளவன். இத்தகைய ஞான அரசாட்சியைப் பரிசுத்த பாப்பானவர்தான் தரலாம். ஓர் குருவானவர் இப் பாத்தியதை ஒன்றையும் பெறுமல், சட்டங்களை ஏற்படுத்தவும், அது செய்யவும், இது செய்யவும் மேற்றிராணியாரைப் போல் நடிப்பாரேயாகில், உடனே அவர் திருச்சபைப் பிரஷ்டர். இரண்டாங் காரியம், தெரிந்துகொண்ட குருவானவர் அபிஷேகம் பெறவேண்டும். அபிஷேகம் பெறவும் அபிஷேகம் கொடுக்கவும் அர்ச். பாப்பானவர்தான் உத்திரவளிக்கலாம். பரிசுத்த பாப்பானவர் உத்தரவின்றி ஓர் மேற்றிராணியார் ஓர் குருவானவரை அபிஷேகம் செய்வாராகுல், பெற்றவருக்கும் கொடுத்தவருக்கும் ஐயோ கேடாம்; இப்பேர்க்கொத்த இருவரும் பெருந்துரோகத்தைக் கட்டிக் கொண்டார்கள். அபிஷேகம் பெற்றவர் மேற்றிராணியார்தான்; அவருக்கு யாதொரு ஞான அரசாட்சி பாத்தியதையில்லை; இப்படிப் பாத்தியதையில்லாமல் உறுதி பூசுதல் முதலியது கொடுத்தால், அவ்வுறுதிபூசுதல் மெய்யான உறுதிபூசுதல் தான்; ஆனுல் அவர் கொடுக்கும்போதெல்லாம் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறுர்.

* * * *

## 16. பிரிவினை.

பிரிவினை என்றுல் என்ன? பிரிவினை (திருச்சபையைவிட்டுப் பிரிதல்) ஓர் பெருந்துரோகம், பெரும் பாவம், பெரும் மூடத்தனம். பிரிவினையென்றுல், திருச்சபையின் தலைவராகிய பரிசுத்த பாப்பானவரை விட்டுப் பிரிந்து போகிறதாம்; திருச்சபையின் தலைவரைவிட்டுப் பிரிகிறதென்றுல், திருச்சபையை விட்டுப் பிரிதலாம், சர்வேசுரன்

ஏற்படுத்திய சபையை விட்டுப்பிரிதலாம், சர்வேசுரனைவிட்டுப் பிரிந்துபோதலாம். திருச்சபையின் சரியான அதிகாரத்தையும் அர்ச். பாப்பானவரையும் வேண்டாமென்று விட்டுப்பிரிந்துபோகும் சில கிறீஸ்துவர்களின் குழப்பமே பிரிவினை. இது பாவங்களிலெல்லாம் முதன்மையான பாவம். இக்குற்றத்திற்கு ஆளாகும் கிறீஸ்துவர்கள் அவர்கள் யாராயிருந்தாலும் சரி, ஐயோ! சர்வேஸ்பரனுக்கு எப்போர்க்கொத்த கணக்குக் கொடுக்கவேண்டியவர்கள்! பிரிவினை திருச்சபைக்கு விரோதமான சதிமானம். இக்கீழ்ப்படியாமையின் கூலி விசுவாசத்தை இழந்துபோதலாம். கிரீஸ், ருசியா, ஸ்வீடன், ஜெர்மனி, இங்கிலாந்து முதலிய தேசங்கள் திருச்சபையைவிட்டுப் பிரிந்தன; விசுவாசத்தை இழந்தன. அர்ச். பாப்பானவரையும் திருச்சபையையும் விட்டுப் பிரிந்த சபைகள் (கூட்டம்) இவ்வுலக அதிகாரத்தின் வாயில் விழுகிறார்கள்; நீச அடிமைத்தனத்துக் காளாகிறார்கள்; அவர்கள் வேத சாரத்தையும் நன்னடத்தைக்குள்ள மேன்மையையும், தைரியத்தையும், வேத போதனையையும் இழந்துபோகிறார்கள். இப்போர்ப்பட்ட சபைகளிலிருக்கும் அதிகாரிகள் அநேகமாய்ப் போலீஸ்காரரைப் போன்றவர்கள். பிரிவினைக்காரர் படுந்துன்பம் எத்தனை! பிரிவினையென்றால் மரணம், பிரிவினையென்றால் அபகீர்த்தி.

*   *   *   *

## 17. திருச்சபைக்கு விரோதமான பொய்க் கோட்டைகள்.

"புழுகுங்கள், புழுகுங்கள், கடைசியில் கொஞ்சமாவது நிற்கும்" என்று மரியாதைகெட்ட வால்த்தேர் என்ற வேத விரோதி எழுதினான். திருச்சபையின் முதல் துவக்கி வேத விரோதிகள் கையாடிவந்த முக்கிய ஆயுதம் பொய்யே.

திருச்சபையைப் பற்றியும், பாப்புமார்களைப்பற்றியும், மேற்றிராணிமார்களைப் பற்றியும் பெரும் பொய்களைச் சொன்னார்கள், சொல்லிவருகிறார்கள், சொல்லிவருவார்கள். இப்பொய்யின் பெருக்கு உலகமெங்கும் பரவியிருக்கிறது. திருச்சபையில் நடக்கும் காரியங்களை விபரீதப்படுத்தி, அவைகளுக்கு விரோதமாய் சகல அபாண்டங்களையும் கக்கி, பாலரையும் அறியாதவரையும் மோசஞ்செய்தவர்கள் கொஞ்சம் பேரா? "பாப்பானவரும் மேற்றிராணிமார்களும் சண்டையாளிகள், இரத்தப்பிரியர், அவர்கள் இருக்கும் வரை அரசாங்கம் விடியாது; பாப்பானவர் ஜனசமூகத்தின் சத்துராதி, அவர் தொலையவேண்டும்" என்று இது முதலியவைகளை சொல்லிப்பேசிய உபந்நியாசங்கள் எத்தனை, எழுதிய புஸ்தகங்கள் எத்தனை! நல்லமனதுள்ளவர்களே, இதை அறிந்திருங்கள்; திருச்சபைக்கு விரோதமாயும், பாப்பானவர் மேற்றிராணிமார்களுக்கும் விரோதமாயும், ஏதாவது கேள்விப்பட்டால், இது புதிதென்று நினைக்காதீர்கள்; இது உண்மையென்று உடனே ஏற்றுக்கொள்ளாதீர்கள்; சாவதானமாய் ஆராய்ந்து யோசித்துப்பாருங்கள். அநேகர் சொல்லுகிறார்களே என்று எண்ணி மோசம்போகாதீர்கள். எல்லாவற்றையும் சரிவர விசாரியுங்கள்.

* * * *

## 18. திருச்சபை சிறுவரின் தாய்.

திருச்சபைதான் சிறுவர்களுக்கும் சிறுமைப்பட்டவர்களுக்குந் தாய்: சத்திய திருச்சபையில்தான் தர்ம சகோதரிகள் சபையும், கிறீஸ்துவ துறவிகள் சபையும், எளியரின் சிறிய சகோதரிகளின் சபையும் உள. தேவ சாரந்தான் திருச்சபையில் இப்பேர்கொத்தவர்களை எழுப்பி, உறுதிப்படுத்தி அதிகரிக்கக்கூடும். இக்கன்னியர்களும் சந்நியாசிகளும் நாள்தோறும் செய்யும் வீரசூரக்கிரிகைகள் எத்தனை!

சத்திய திருச்சபை எளியவர்களுக்கும், பாலர்கட்கும், பலவீனமுள்ளவர்கட்கும், சிறுமைப்பட்டவர்களுக்குந் தாய். திருச்சபை ஒன்றுதான் இவர்களை நேசிக்கிறது; இதர மதஸ்தர் இத்தகையோரை நேசிப்பதாக வாயினல் சொல்லலாம், வார்த்தைகளினுலும் கிரிகைகளினுலும் இவர்களை நேசிப்பது திருச்சபையே. எளியருக்கும் சிசுக்களுக்கும் வயோதிகருக்கும் வியாதியஸ்தருக்கும் யாவராலும் கைநெகிழப்பட்டவருக்கும் பைத்தியம் பிடித்தவர்களுக்கும் சகல அடிமைத் தொழிலும் செய்து உபசாரஞ் செய்து வருவது திருச்சபையே? நுழையமுடியாத எளியர் குடிசைகளையும், வைத்தியசாலைகளையும் சிறைக்கூடங்களையும் பார்த்து விசாரித்து வருவது யார்? வேறுமதஸ்தர் இப்பேர்க்கொத்த காரியங்களை சில நாளைக்குச்செய்தால், ஆதாயத்துக்காகவே, அல்லது இவ்வுலக மகிமை கீர்த்திக்காகவே; சேசுவின் சிநேகமும், தேவதாயின்மேல் வைத்த நேசமும், தேவ நற்கருணையின்மேலுள்ள அன்பும், திருச்சபையிலுள்ள கன்னிமைத்தனமும், துறவிகளுடைய ஒறுத்தலும் இவைகள்தான் திருச்சபையில் விளங்கும் இப்பிறசிநேகத்துக்குக் காரணம். ஒற்றுமை, உண்மை, உதாரம் என்பது திருச்சபையின் வெற்றிக் கொடியாம்.

*　*　*　*

## 19. திருச்சபைக்காதார்.

திருச்சபையை விரோதிப்பவர்களின் பெருந்துரோகம்: பரிசுத்த பாப்பானவரையும் மேற்றிராணிமாரையும் திருச்சபையையும் எதிர்த்து நிற்பது, சேசுநாதரோடு போராடுவதாம். திருச்சபைக்கு விரோதமான சண்டை தேவதுரோகமானது, தாயைக் கொன்றதுபோலானது. ஏனெனில் திருச்சபையானது சர்வேசுரனுடைய ஏற்பாடு, மனித

ருடைய தாய். தன் தாயை வெறுத்து, அவளைப் பழித்து, அவள்மேல் இல்லாததையும் பொல்லாததையும் சுமத்தி, அவளை அடித்துத் துரத்திக் கொலைசெய்கிற பிள்ளையை என்னென்று சொல்லலாம். நான் திருச்சபைக்கு விரோதமாய் நடப்பதில்லை, இவ்விக்காரணத்தை முன்னிட்டு குருக்களுக்கு விரோதமாய்த்தானே பேசுகிறேன், என்னுடைய மேற்றிராணிமாரைத்தானே எதிர்த்து நிற்கிறேன் என்று சொல்லாதே. நீ இப்படிச் செய்யும்போது திருச்சபைக்கு விரோதமாய்த்தான் நிற்கிறாய். நீ திருச்சபையை எதிர்க்கும் போது என்ன செய்கிறாய் என்று தெரியுமா? ஒவ்வொரு ஆத்துமத்துக்கு விரோதமாயும் ஒவ்வொரு ஆத்துமத்தின் இரட்சண்ணியத்துக்கு விரோதமாயும் நீ சண்டை செய்கிறாய். பால்மறவாத சிசுவின் தாயைக் கொல்லுகிறவன், அப்பிள்ளைக்கு இடறல் செய்கிறான் அல்லவா? எப்படி பிள்ளையை தாயிடம் ஆண்டவர் ஒப்பித்திருக்கிறாரோ, அது போலவே விசுவாசிகளைத் திருச்சபையாகிய தாயிடம் ஒப்பித்திருக்கிறார். திருச்சபையை எதிர்த்து நிற்பது ஜன சமுகத்திற்கும் முன்னேற்றத்துக்கும் கேடு விளைவிப்பதாம்; இவைகளுடைய நன்மையைத் தேடுவதும் திருச்சபையே. திருச்சபையை எதிர்த்து நிற்பது எளியருக்கு தீங்கிழைப்பதாம்: மோட்சத்தைக் காண்பித்து நம்பிக்கையை நாட்டி, பெத்லெகேம் மாட்டுக்குடிலையும், சிலுவையையும் காண்பித்து துன்பத்தில் பொறுமையை ஊட்டி; அர்ச்சியசிஷ்டவர்களுடைய ஜீவியத்தையும் வேதசாட்சிகளுடைய வேதனையையும் கூறி, உற்சாகத்தை மூட்டி; சேசுநாதர்சுவாமி தேவதாயின் சிநேகத்தையும், தேவ நற்கருணையையும்பற்றி கற்றுக்கொடுத்து சந்தோஷத்தை ஊற்றி; துன்பப்படுவோரின் கண்ணீரைத் துடைப்பது திருச்சபையல்லவா? இன்னும் திருச்சபையை எதிர்த்து நிற்கிறவன் பாலர்களுக்கு சதிமோசம் செய்கிறான். அவர்களுடைய மாசற்ற

தனத்துக்கும் பலவீனத்துக்கும் ஆதரவு திருச்சபையே. பாலர்களுக்குத் துன்மாதிரிகையாயிருப்பவனைப்பற்றி ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் என்ன? "அவன் கழுத்தில் இயந்திரக்கல்லைகட்டி கடலில் அமிழ்த்திவிடுவது நலம்' என்கிறார். திருச்சபையின் வார்த்தையைக் கேளாதவன் அஞ்ஞானியைப்போலிருக்கக் கடவான் என்ற ஆண்டவர் திருச்சபையை எதிர்த்து நிற்பவர்களைப்பற்றி என்ன சொல்லுவார்? இச்சனங்கள்தான் கேட்டுக்குக் கொண்டுபோகும் அகன்ற பாதை வழியாய் போகிறவர்களாக்கும் என்பாரோ.

*　　　*　　　*　　　*

## 20. திருச்சபையின் காலவரை.

திருச்சபை இன்னும் வெகு நாளைக்கிருக்குமா? திருச்சபை இன்னும் எவ்வளவு நாளைக்கு இருக்குமென்று நமக்குத்தெரியாது. ஓர் காரியம் நிச்சயம்: உலகம் எவ்வளவு நாளைக்கு இருக்குமோ அவ்வளவு நாளைக்குத் திருச்சபையும் இவ்வுலகில் நீடித்திருக்கும். எவ்வளவோ காலமாக அவிசுவாசிகள் இப்போது இருக்கும் பாப்பானவர்தான் கடைசி பாப்பானவர் இனிமேல் பாப்பானவருமில்லை திருச்சபையுமில்லை என்றார்கள். ஒரு பாப்பானவருக்குப் பின் ஓர் பாப்பானவர் வந்துகொண்டேயிருக்கிறார். உலகமுடியுமட்டும் பாப்பானவர் இருந்துகொண்டேயிருப்பார்; திருச்சபையும் உலக முடியுமட்டும் நிற்கும். உலகம் எப்போது முடியும் என்பது ஒருவருக்கும் தெரியாது, சர்வேசுரனுக்குத்தான் தெரியும்; இதைத்தான் சேசுநாதர்சுவாமி சொல்லியிருக்கிறார்; அர்ச். சின்னப்பரும் இவ்வாறே சொல்லிக்கொடுத்தார். உலகமுடியுமுன், சகல குழப்பங்களும், சண்டைகளும், விசுவாச துரோகங்களும், அற்புதங்களும் அதிசயங்களும் நடக்கும்; உலகம் துவக்கின நாள்முதல் இல்லாத

துன்பதுயரமெல்லாம் வந்துசேரும். இத்தகைய நாட்கள் அடுத்துவந்துவிட்டனவா? தெரியாது. இப்போது அநேக குழப்பங்களிருப்பது மெய்யே; சத்திய திருச்சபைக்கு விரோதமாய் அநேகர் எழுந்து நிற்பதும் மெய்யே. நாம் என்ன செய்யவேண்டும்? இரட்சிக்கப்படவேண்டுமானால் விழிப்பாயிருக்கக்கடவோம், அதிகமாய் வேண்டிக்கொள்ளக்கடவோம். உறுதியான கிறீஸ்துவர்களாயும் பாப்பு மேற்றிராணிமார்களுக்குக் கீழ்ப்படிதலான பிள்ளைகளாயுமிருக்கக்கடவோம்; மெய்யான விசுவாசத்தோடு அடிக்கடி தேவ திரவிய அநுமானங்களைப் பெறக்கடவோம். உலக நாட்டத்தை விட்டுவிட்டு, உலகத்தை நாளுக்கு நாள் அதிகமாய்மறந்து, மோட்சத்தில் அதிகமாய் ஜீவிக்கக்கடவோம். உழைப்பையும் வருத்தத்தையும் வேதனையையும் பாராமல், நமது பணத்தையும் சௌக்கியத்தையும் நமது தேகத்தையும் நமக்குச் சொந்தமான யாவற்றையும் சேசுநாதருடைய ஊழியத்திலும் திருச்சபையின் ஊழியத்திலும் செலவழிக்கக் கடவோம். அப்போது நாம் ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை. துன்பவேளைகளில் சேனையிலுள்ள எல்லோரும் சேனாவீரரை நெருங்கி நிற்பதுபோல நாமும் நமது மேற்றிராணிமார்களையும் பாப்பானவரையும் சுற்றி நெருங்கி நிற்போமாக; அவிசுவாசிகள் சொல்வதைக்கேட்டு ஏமாந்து போகாமலிருப்போமாக. எங்கே இராயப்பர் (பாப்பானவர்) இருக்கிறாரோ அங்கே திருச்சபையிருக்கிறதென்று அர்ச். அமிர்தநாதர் சொன்ன வார்த்தைகள் எப்போதும் நம் மனதில் சப்திக்கக்கடவனவாக.

# அநுபந்தம்.

பிரான்ஸ் தேசத்தில் 'Journal d'Indre et Loire' எனும் பத்திரிகையின் பத்திராதிபர் மேற்றிராணிமார்களுடைய நடபடிக்கைகளில் குற்றம் கண்டுபிடித்தெழுதியபடியால், தூர் பட்டணத்து அதிமேற்றிராணியார் ஓர் நிருபம் எழுதி மேற்சொன்ன பத்திரிகையைக் கத்தோலிக்கர் வாங்கக்கூடாதென்றும் வாசிக்கக்கூடாதென்றும் விதித்தபோது அவ்வந்திக்கத்தக்க அதி மேற்றிராணியாருக்கு 1888-ம் வருஷம் டிசம்பர் மாதம் 17-ம் தேதி,

## 13-ம் சிங்கராயர் என்னும் பரிசுத்த பாப்பானவர் எழுதிய நிருபம்.

வணக்கத்துக்குரிய பிரிய சகோதரருக்கு, சௌபாக்கியமும் அப்போஸ்தாலிக் ஆசீர்வாதமும் உண்டாவதாகவும்.

பிள்ளைகளைப்போல் நாம் நேசிப்பவர்களைக் கண்டிப்பாய் நடத்துவது நம்மெல்லோருடைய மனதுக்கும் வருத்தமாயிருந்தபோதிலும், நாம் பிறருடைய ஆத்தும இரட்சண்ணியத்திற்காக உழைத்து, அவர்களைப் பரிசுத்ததனத்தின் பாதையிற் காப்பாற்றவேண்டியவர்களாகையால், மேற்சொன்ன கண்டிப்பைக்காட்ட சில சமயங்களில் கடமைப்பட்டிருக்கிறோம். தின்மையை உடனே அடக்காவிடில் அது நாளாவட்டத்தில் பிடிவாதத்தினால் அதிகரித்து விசுவாசிகள் மத்தியில் பெருந்தீமையான வழக்கங்களைப் புகுத்திவிடலாம் என்று நாம் அஞ்சவேண்டிய காலத்தில் கண்டிப்பாயிருப்பது அவசியமாம். இக்காரணத்தினாலல்லவா, வணக்கத்துக்குரிய சகோதரரே, சில கிறீஸ்துவர்கள் ஒரு

மேற்றிராணியாரையல்ல அநேக மேற்றிராணிமார்களை விரோதித்து அவர்களுடைய பரிசுத்த அதிகாரத்தை எதிர்த்தபடியாலும்; அவர்கள் தங்கள் உன்னதமும் பரிசுத்தமுமான உத்தியோகத்தில் தப்பிதம் செய்ததுபோற் பாவித்து, அவர்கள் நடபடிகளிற் குற்றங் கண்டுபிடித்து சங்கையீனமான வார்த்தைகளைப் பிரயோகித்து, ஓர்பத்திரிகையில் எழுதினபடியாலும், அதைக் கண்டனம் செய்ய உம்முடைய அதிகாரத்தை உபயோகிக்க வேண்டியவரானீர். விசுவாசிகள் தாங்களும் கத்தோலிக்கரென்று சொல்லிக்கொண்டு, மேற்றிராணிமார்களென்று முதலாய்ப் பாராமல், தங்களிஷ்டப்படி எவரையும் மனம்போல குற்றங் கண்டுபிடித்து, எவ்வார்த்தைகளையும் பிரயோகித்து அதைப்பற்றி எழுதியும், விசுவாசத்துக்கடுத்தகாரியங்களைப் பற்றி ஒன்றும் சொல்லாவிடினும் மற்றெல்லாக் காரியங்களிலும், அவைகள் எப்பேர்ப்பட்டவைகளானாலும், தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டும், இவைகளையெல்லாம் பத்திரிகைகளில் பிரசுரிக்கத்துணிவது சகிக்கக்கூடாத விஷயம்; ஆதலால் நீர் செய்ததை பூரணமாய் நாம் அங்கீகரிக்கிறோம்.

2. எக்காலமும் மேற்றிராணிமார்களின் பரிசுத்த அதிகாரம் பழுது பங்கப்படாதிருக்கும்படி கவலையாய்ப் பார்த்துக் காப்பாற்ற பிரயாசப்படுவது விசேஷமாய் நமது கடமையே. அவ்வதிகாரத்தை கத்தோலிக் கிறீஸ்துவர்கள் சரிவர மதித்து அதற்கவர்கள் ஒன்றுங்குறையின்றி பயபக்தியுடன் கீழ்ப்படியும்படி கண்ணுங் கருத்துமாயிருப்பதும் நமது கடமையே. சர்வேஸ்பரன் ஏற்படுத்திய திருச்சபை வெளிப்படையான ஓர் அஸ்திவாரத்தின்மேல் நிலைத்திருக்கின்றது: அதாவது முதன்முதல் அர்ச். இராயப்பர், அவரைப் பின்தொடர்ந்து வருகிற பாப்புமார்கள் மேலும்;

இரண்டாவதாக, அப்போஸ்தலர்கள் அவர்கள் பதிலாளிகளாகிய மேற்றிராணிமார்கள் பேரிலும் நிலைத்திருக்கிறது. இவர்கட்குக் கீழ்ப்படிவதானது நமதாண்டவராகிய கிறீஸ்துநாதருக்கு கீழ்ப்படிவதுபோலாம்; இவர்களை நிந்திப்பது நமதாண்டவரை நிந்திப்பதுபோலாம். மேற்றிராணிமார்கள் திருச்சபையின் அதிமுக்கியமான அங்கத்தினராயிருக்கின்றனர். இந்த அங்கமோவென்றால் சர்வேஸ்பரன் அதற்குத் தந்தருளிய அதிகாரத்தின் உரிமையால் மனிதர்களுக்குப் போதித்து அவர்களை ஆண்டு நடத்தி வருகின்றது. ஆதலால் மேற்றிராணிமார்களை எதிர்த்து நிற்பவனும், அவர்களுக்குக் கீழ்ப்படியமாட்டேனென்று பிடிவாதஞ்செய்கிறவனும் திருச்சபையைவிட்டுத் தவறிப் போகிறான் (மத். 18. 17). விசுவாசத்துக்கடுத்த காரியங்களில் மாத்திரமல்ல, மேற்றிராணிமார்களின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்ட எல்லாக்காரியங்களிலும், மேற்றிராணிமார்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். விசுவாசிகளுக்கு விசுவாசத்தைச் சொல்லிக்கொடுக்கும் போதகர்கள் இவர்களே; அச்சனங்களை ஆண்டு நடத்தும்படி நியமிக்கப்பட்ட தலைவர்களும் அதிபதிகளும் இவர்களே. ஆதலால்தான் சர்வேஸ்பரன் அவர்களிடம் ஒப்படைத்த ஜனங்களின் ஆத்தும இரட்சண்ணியத்தைப்பற்றி அவருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியவராயிருக்கின்றனர். ஆகையால்தான் அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பர் கிறீஸ்துவர்களுக்கெழுதிய புத்திமதியாவது: "உங்கள் ஞானவழிகாட்டிகளுக்குப் பணிந்து அடங்கி நடங்கள்; ஏனெனில் அவர்கள் உங்கள் ஆத்துமங்களுக்காக உத்தரவாதம் பண்ணவேண்டியவர்களாயிருக்கிறார்கள்" (எபி. 13. 17). மேய்ப்பர்கள் என்றும் மந்தை என்றும் அதாவது ஆளுபவர்களென்றும் அவர்களால் ஆளப்படுகிறவர்கள் என்றும், திருச்சபையில்

கிறீஸ்துவர்கள் இருவகுப்பாராவாரென்பதும்; இவ்விரு வகுப்பாருடைய அலுவலும் வித்தியாசமானவையென்ப தும் வெள்ளிடை மலேயே. போதிப்பதும், ஆளுவதும், ஜீவியத்துக்கடுத்த ஒழுங்குகளைக் கொடுப்பதும் கற்பனைகளை விதிப்பதும், முதல் திறத்தார் காரியம்; பணிவுடன் கீழ்ப் படிந்து கற்பனைகளை அநுசரித்து கற்பிப்போருக்கு சங்கை செய்துவருவது இரண்டாம் திறத்தார் அலுவல். பணிந்து நடக்கவேண்டிய கடமையுள்ளவர்கள் ஆளவேண்டியவர்க ளுடைய அலுவலை அபகரித்துக்கொண்டால், அவர்கள் செய்வது தப்பிதம், அநீதம்; அது திருச்சபையின் கர்த்தாவாகிய சர்வேஸ்பரன் ஏற்படுத்திய ஒழுங்கைத் தங்களாலியன்றமட்டும் நிர்மூலமாக்குவதாகும். மேற்றி ராணிமார்களில் யாதொருவர் தமது உத்தியோகத்தைக் கவனியாமல் தம்முடைய அலுவலுக்குரிய கடமைகளில் கவலையீனமாக விருப்பதாகத் தோன்றினாலும்; அக் காரணத்தினிமித்தம் அவர் தமது அதிகாரத்தில் சிறிதும் இழந்துபோவதில்லை; அவர் பரிசுத்த பாப்பானவரோடு ஐக்கியப்பட்டிருக்கும் காலமெல்லாம் அவருக்கு செலுத்த வேண்டிய வணக்கம் கீழ்ப்படிதலில் கடுகளவும் இல்லை யென்று சொல்ல எவனும் அருகனல்ல. மேற்றிராணிமார் கள் நடத்துகிற விஷயங்களை விசாரித்து அவைகளிற் குற் றம் பிடிப்பதற்கு கிறீஸ்துவர்களுக்கு இலவலேசமும் யாதொரு அதிகாரமில்லை; இவ்வதிகாரம், சேசுநாதர்சுவாமி ஏற்படுத்திய அரசாங்கத்தில் மேற்றிராணிமார்களுக்கு மேற் படியிலிருப்பவர்களுக்கும், விசேஷமாய்ப் பரிசுத்த பாப்பா னவருக்குந்தான் உண்டு; ஏனெனில் அர்ச். பாப்பானவ ருக்குத்தான் ஆட்டுக்குட்டிகளை மாத்திரமன்று, ஆடுகளை யும், அவைகள் எங்கிருந்தபோதிலும் மேய்க்கும்படி சேசு நாதர் சுவாமி கட்டளையிட்டிருக்கிறார். காரியம் ஏதோ பெரிதாயிருந்து, முறையிடவேண்டி நேர்ந்தால், சண்

டைக்கும் துர்மாதிரிகைக்கும் காரணமாயில்லாதபடியும், ஊரில் பறைசாற்றுதபடியும், அவதூறுசொல்லி ஒன்றையும் எழுதாமலும், பொது நன்மையை ஆசிக்கிறவர்கள் போல, மேரை மரியாதையோடும் மட்டுத்திட்டத்தோடும், எல்லாவற்றையும் பரிசுத்த பாப்பானவரிடம் தெரிவித்துக்கொள்ளலாம்.

3. இம்மூல சத்தியங்களை நாம் ஒருதடவையல்ல பல தடவை அழுத்தி அழுத்திச் சொல்ல நேர்ந்தது. இவைகளை மீறினல் திருச்சபையில் கனத்த அலங்கோலையும் மிகுந்த ஒழுங்கீனமுந்தான் ஏற்படும். நீர் நியாயமுடன் மேற்கோளாகக்கூறும் நமது பிரான்ஸ் தேசத்து ஸ்தாறுதிபதிக்கு நாம் எழுதிய நிரூபத்தையும்; அதற்குப் பின்னல் பாரீஸ் அதிமேற்றிராணியாருக்கும், பெல்ஜிய தேசத்து மேற்றிராணிமார்களுக்கும், பிரான்ஸ், ஸ்பெயின் தேசத்து மேற்றிராணிமார்களுக்கும் நாம் எழுதிய நிரூபங்களையும் வாசித்தறியலாம். நீர் குறித்துக்காட்டுகிற தற்கால குழப்பம் அமர்ந்து, திருச்சபையில் ஞான அதிகாரமுள்ளவர்களுக்கு யாவரும் பணிந்து, அவர்களுக்கு வணக்கம் காட்டுவார்களென்கிற நம்பிக்கையினல், மேற்கூறிய நிரூபங்களைப் பார்க்கும்படி திரும்பவும் தூண்டுகிறோம். திருச்சபை உத்தியோகஸ்தர்களுடைய அதிகாரத்தை பிரசித்தமாய் நிந்திப்பதும், இன்னும் இரகசியமான வழிப்பாடுகளாலும், வஞ்சகமாகவும், அவ்வதிகாரத்தைக் குறைக்கத் தேடுதல், மேற்சொன்ன கடமையை மீறுவதாகும். மெய்யான கீழ்ப்படிதல் வார்த்தையினல் அல்ல இருதயத்திலிருந்தும் மனதிலிருந்தும் புறப்படுவதால் விளங்கும்.

4. ஓர் பத்திரிகையின்மேல் தற்சமயம் குற்றஞ்சாட்டப்படுவதினல், மேற்சொன்ன புத்திகளையும் நிரூபங்களையும்; பரிசுத்தமும் சிறிதும் மீறத்தகாததுமான கற்பனைகளா

கப்பாவித்துக் கொஞ்சமேனும் அவைகளில் தவறுதபடி கத்தோலிக் பத்திரிகைகளைப் பிரசுரிக்கும் பத்திராதிபர்கள் யாவருக்கும் நாம் ஆஞ்ஞாபிக்கிறோம். மேற்றிராணிமாருக்குச் சொந்தமான ஓர் காரியத்தைப்பற்றி பரிசுத்த பாப்பானவர் இன்னும் தம் தீர்மானத்தைச் சொல்லா முன்னமே, மேற்சொன்ன கற்பனைகளைக் கைநெகிழ்ந்து கத்தோலிக் பத்திராதிபர்கள் தாங்களே தங்கள் அபிப்பிராயத்தைக் கூறி அக்காரியத்தில் குற்றங்கண்டுபிடித்தாலும்; மேற்றிராணியாரின் அதிகாரத்துக்குப் பங்கம் வருத்துவித்து தங்களுக்கில்லாத அதிகாரத்தைத் தாங்களே கவர்ந்துகொண்டாலும் கத்தோலிக் பத்திராதிபர்கள் எனும் மகிமை உண்மையாக அவர்களுக்குச் செல்லாதென்றும், நிலைநிறுத்தி பொலிவடைவிக்க எண்ணித் தாங்கள் துவக்கின உத்தமகாரியத்தை அவர்கள் நாடுவதில்லையென்றும் அவர்கள் திண்ணமாயறியக்கடவார்கள்.

5. தவறிப்போனவர்கள் செவ்வையான பாதைக்கு வந்துசேரவேண்டுமென்றும், எல்லாவிசுவாசிகள் மனதிலும் மேற்றிராணிமார்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய கடமை ஆழமாய்ப் பதிந்திருக்கவேண்டுமென்றும் ஆசித்து நமது வணக்கத்துக்குரிய சகோதரராகிய உமக்கும் உமது குருக்களுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் நமது அப்போஸ்தலிக் ஆசீர்வாதத்தை அளிக்கிறோம்.

6. உரோமாபுரியில் அர்ச். இராயப்பர் தேவாலயத்தில் 1888-ம் வருஷம் டிசெம்பர் மாதம் 17-ம் தேதி நாம் பாப்பானவர் பதவிக்குவந்த 11-ம் வருஷத்தில் தந்தோம்.

**13-ம் சிங்கராயர்,**

பாப்பானவர்.

...னம்.
கள்ள அறிவீனம் 16.
மூட அறிவீனம் 16.
சுத்த அறிவீனம் 16.
கத்தோலிக் வேதத்தை விட்டவர்கள் 17, 18, 23.
கலியாணம் 21 (19, 20), 23 (26), 27 (8, 10).
கன்னியர்கள் 21 (16, 18), 22 (23), 23 (25, 26), 24 (30).
குருக்கள் 6, 10, 14, 15, 20, 21, 24 (30), 26, 30, 31, 32.
குற்றம்.
குற்றத்திற்குடந்தை 10, 23 (24).
வெளிப்படையான குற்றம் 9.
சந்நியாசிகள் 21 (16, 18), 22 (23), 23 (25, 26), 24 (30)
சந்நியாச சபைகள் 13, 21.
ஞான சிட்சைகள் 6, 8.
தீர்க்கப்பட்ட ஞான. சி. 9, 16, 17—24.
தீர்க்கும் ஞான. சி. 9, 16, 24, 27.
ஆளால் நியமிக்கப்பட்ட ஞான. சி. 31.
ஞானசிட்சைக்கு மன்னிப்பு 29—32.
தண்டனைகள் 5, 6, 7.
யார் விதிக்கலாம் 6, 11, 12.
இதில் சந்தேகம் 11.
யாருக்கு 6, 11.
அபராத தண்டனைகள் 5, 6.
ஒருவனுக்கு அநேக தண்டனைகள் 7, 32.
திருச்சபை 3—7.
திருச்சபை அதிகாரத்துக்கு விரோதம் 19, 20, 25 (3, 4), 26(5)
திருச்சபைச்சொத்து 21, 24 (29).
திருச்சபைப்பிரஷ்டம் 4, 13, 17-24, 29, 34.
இதினால் வரும் நஷ்டம் 13, 14, 15.
தீண்டாப்பிரஷ்டர்கள் 15, 20.
தேவ தூஷணம் 25.
நல்லபேரைக் கெடுத்தல் 27.
நிஷேதம் 28, 34.
பதிதர் 17, 18, 23.
பாப்பானவர் 6, 17, 18, 19.
பிரமாணம் 26 (6).
பிரிவினைக்காரர் 17, 18, 23.
புத்தகங்கள் 10, 18, 23.
பொய்யாராதனை 25.
மேற்றிராணிமார்கள் 6, 7, 10, 11, 12, 13, 19, 25, 27, 32, 34.

## திருச்சபைச்சட்ட இலக்கக்கிரமமும் அவைகள் தோன்றும் பக்கமும்


| தி. ச. | பக்கம். |
|---|---|
| 362 | 6 |
| 1240 | 15, 34 |
| 1241 | 15 |
| 1507 | 27 |
| 1557 | 13 |
| 1561 | 11, 12 |
| 1566 | 11, 12 |
| 2209 | 16 |
| 2213 | 9 |
| 2214 | 3 |
| 2215 | 5 |
| 2216 | 6 |
| 2220 | 6 |
| 2221 | 7 |
| 2223 | 7 |
| 2224 | 7 |
| 2226 | 12 |
| 2227 | 13 |
| 2229 | 16 |
| 2230 | 16 |
| 2231 | 16 |
| 2235 | 9 |
| 2241 | 8 |
| 2251 | 30 |
| 2252 | 32 |
| 2254 | 32 |
| 2258 | 15 |
| 2259 | 13, 14 |
| 2260 | 14, 15 |
| 2261 | 15 |
| 2262 | 14 |
| 2263 | 14 |
| 2267 | 15 |
| 2291 | 33 |
| 2314 | 17 |
| 2318 | 18, 23 |
| 2319 | 22 |
| 2320 | 17 |
| 2323 | 25 |
| 2325 | 25 |
| 2327 | 20 |
| 2331 | 25 |
| 2332 | 18 |
| 2334 | 19 |
| 2335 | 20 |
| 2337 | 26 |
| 2338 | 20 |
| 2339 | 24 |
| 2341 | 19, 21 |
| 2342 | 21 |
| 2343 | 19, 22 |
| 2344 | 26 |
| 2346 | 21 |
| 2347 | 24 |
| 2348 | 26 |
| 2349 | 27 |
| 2350 | 23 |
| 2352 | 24 |
| 2353 | 27 |
| 2355 | 27 |
| 2356 | 27 |
| 2360 | 19 |
| 2363 | 20 |
| 2369 | 17 |
| 2385 | 23 |
| 2388 | 21, 22, 23 |


149405

103
9-27